BTA
BERGEN TAMILSK AVIS
# தேன்தமிழிதழ்
Bergen Tamilsk Avis,
Krohnegården 5b,
5146 Fyllingsdalen,
Norway.
Org.nr: 926 840 320 - ISSN 2703-8440



ஓவியம்: *fathima minha, Batticaloa*

வணக்கம்!

உக்ரைன் மீது ரஷ்யா இராணுவத் தாக்குதல் ஆரம்பிக்க, மூன்றாம் உலக யுத்தம் ஆரம்பித்து விட்டதாகவும். அதுவே நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் சகல ஊடகங்களும் செய்திகளை பரிமாறிக் கொண்டுள்ளனர். யுத்தம் நடைபெறுவது இரு நாடுகளுக்கு மத்தியிலேயே. ஆனால், அதன் தாக்கம் உலகம் பூராகவும் நிகழ்ந்துள்ளது. களத்திலுள்ள இரு நாடுகளுக்குப் பின்னணியில் பல நாடுகள் தமது பங்குக்கு ஆதரவைப் பல வழிகளில் வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் வழங்கி வருகின்றன. மிகப் பெரிய நாடுகள் தமது உச்சக்கட்ட ராஜதந்திர
அரசியல் நுட்பங்களை, இந்த யுத்தத்தை பயன்படுத்தி தமது அரசியல் ஆதிக்கத்தை உலக அரங்கில் விரிவுபடுத்துவதை அவதானிக்க முடிகிறது.

யுத்தகளத்தில் பல ஆயிரக்கணக்கான வீரர்கள் மரணிப்பதும், காயப்படுவதும் தினமும் நடைபெற்று வருகிறது. அத்தோடு அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுகின்றனர்.
உக்ரைனில் இருந்து ஏராளமான மக்கள் அகதிகளாக ஐரோப்பிய நாடுக-ளில் தஞ்சம் அடைந்து வருகின்றனர். அவர்களுள் பல ஆயிரக்கணக்கானோர் நோர்வே நாட்டில்
அகதி அந்தஸ்த்துக் கோருவதைக் காணமுடிகின்றது.

உக்ரைன் நாட்டுக்காக குரல் கொடுத்துவரும் நேட்டோ உறுப்பு நாடுகள் மீதும் காலப்போக்கில் ரஷ்யா தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சம் அம்மக்களுக்கும், அரசியல் தலைவர்களுக்கும் ஏற்பட்டுள்ளமை இங்கே குறிப்பிடப்பட வேண்டியது.

உக்ரைன் கிழக்கு ஐரோப்பாவில் உள்ள ஒரு நாடு. அந்த நாட்டின் கிழக்கு எல்லையில் உள்ள ரஷ்யாவின் தாக்குதலின் பாதிப்பு உக்ரைன் மக்களுக்கு மட்டுமல்ல, உலக நாடுகள் முழுவதையும் பல வழிகளிலும் பாதிப்படையச் செய்துள்ளது. குறிப்பாக சகல நாடுகளையும் பொருளாதாரரீதியாக உலுப்பி வருகின்றது.

நமது தாய்நாடான Sri Lanka ஒன்றும் விதிவிலக்கல்ல. ஏற்கனவே கொரோனா தொற்றுநோயின் வலிகள் ஆறுமுன், யுத்த கோரத்தால் ஏற்பட்டுள்ள வாழ்வாதாரப் பொருட்களின் பற்றாக்குறையும், விலையேற்றமும் மக்களை துன்பியல் வாழ்வுக்குள் தள்ளியுள்ளது.
எமது மக்களின் இந்த அவல நிலை விரைவில் மாற்றம் பெற வேண்டும். அது உலக அரசியல் தலைவர்களின் கைகளிலேயே உள்ளன என குறிப்பிட்டேயாக வேண்டும்.

# வீரன் ஒருவன் தனக்குள் பேசிக்கொண்டது

எனது கைகளில் ரத்தக் கறை படிந்திருக்கிறது
எதிரியின் ரத்தம் என்கிறது நாடு
அது மனிதனின் ரத்தம் என்கிறேன் நான்
அவன் வீழ்ந்தது இப்போதும் எனது பார்வையை
விரட்டிக் கொண்டே இருக்கிறது
நான் அவனைத் தழுவிக் கொள்ள விரும்பினேன்
அவனது குடும்பத்தைப் பற்றி குழந்தைகளைப்
பற்றி கேட்க விரும்பினேன்
ஆனால் அவனைப் பற்றி எனக்குள் பயம்
அதுபோலவே என்னைப்பற்றி அவனுக்குள்ளும்
பயம்
இந்த அச்சத்தை யார் உருவாக்கியது?
எல்லைக்கோடுகளை உருவாக்கியவர்கள்.
அவர்களே நமது மெய்யான எதிரிகள்.
நான் அவனது உறவினர்களிடம் மன்னிப்புக்
கோருகிறேன்
குழந்தைகளின் முன்னால் மண்டியிடுகிறேன்
அவனைச் சுடுவதற்கு முன் அவனது கண்களைப்
பார்த்தேன்
அதில் குரூரம் தென்பட்டிருந்தால் ஆறுதலாக
இருந்திருக்கும்
நான் பார்த்தது தோழமை, துயரம், கருணை
அவன் விழுந்து கிடந்த போது
மார்பின் மேல் கைகளை வைத்துக் கொண்டு எதை
நினைவு கூர்ந்திருப்பான்?
பள்ளிக்குச் செல்லும் வழியில் பறித்துத் தின்ற
புளியம் பழங்களையா?
இளமைப் பருவத்தில் நண்பர்களோடு சேர்ந்து
பாடிய பாடலையா?
தனது அன்புக்குரியவளுக்கு எழுதிய கடைசி
கடிதத்தையா?
கிராமத்தின் குறுகிய சந்தில் அமர்ந்தபடி பார்த்துக்
கொண்டிருக்கும் தாயின் மங்கிய விழிகளையா?
கோதுமை வயலில் வீசிய குளிர்ந்த காற்றையா?
வேனிலிருந்து இறக்கப்படும் தனது சவப்பெட்டியைப்
பார்த்துக் கதறும் தனது சகோதரியின் அலறலையா?
வீரர்கள் உணர்ச்சிவசப்படக் கூடாது.
பாலைவனத்தில் நடக்கும்போது முளைவிடும்
போதே கேள்விகளெல்லாம் கருகிப் போய் விடும்.
அமைதியாக இருக்கும் ஆடுகளின் செவியில்
மேய்ப்பவனின் கட்டளைகள் மட்டுமே கேட்கும்.
கழுத்தை அறுக்கும் போது காளையின்
வேதனையும் கவலையும்தான் வெளிப்படும்.
வீரம் செறிந்த பாடல்களுக்கு விடை கொடுங்கள்
எனக்காக எந்த சொர்க்கமும் காத்திருக்கவில்லை.
நரகத்தில் ஒரே கோப்பையில் நாங்கள் ஒன்றாகச்
சேர்ந்து நஞ்சை அருந்துவோம்
ஒரே முள் படுக்கையில் படுத்துறங்குவோம்
எல்லைகளே இல்லாத உலகம் குறித்து கைவரப்
பெறாத கனவைப் பகிர்ந்தபடி
ஒன்றாகச் சேர்ந்து அழுவோம்.

**-கே. சச்சிதானந்தன், தமிழில் : ரவிக்குமார்**

---

"அதிர்ஷ்டம் இல்லாதவர்களைக் கொல்வதற்காக
தகுதி இல்லாதவர்களால் வழிநடத்தப்பட்டு
நன்றி இல்லாதவர்களின் நலனுக்காக
விருப்பமில்லாமல் இறந்து போனவர்கள் நாங்கள்"
*(வியட்நாம் யுத்தத்தில் இறந்துபோன அமெரிக்க வீரர் ஒருவரின் கல்லறையில் எழுதப்பட்டிருந்த வாசகம்)*

NRT
Norway Radio Tamil
தேன் தமிழ் ஓசை
30வருடகால ஊடகப்பணி



# கதிகலங்கியிருக்கும் இலங்கையை காலம் மீட்டுத் தருமா?

~ப்ரியமதா பயஸ்~



படம்: தமயந்தி

அழகிய இலங்கைத்தீவு போரால் சின்னாபின்னமாகிப் போனதைவிட இப்போது - போருக்குப்பின் அரசியல், பொருளாதார, சமூக, ஆட்சி சிறப்பின்மையால் சின்னாபின்னமாகிப்போய் இருக்கிறது. நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட அழகிய தீவு இப்போது அனைத்துப் பக்கமும் கடனால் சூழப்பட்ட தீவாகி தன்னிலை இழந்து நிற்கிறது. இலங்கை மக்கள் வரலாறு காணாத நெருக்கடி நிலைக்குள் தள்ளப்பட்டு இருக்கின்றனர். நாளாந்தம் எகிறும் விலைவாசி மக்களைப் பட்டினி நிலைமைக்கு தள்ளி உள்ளது. அதிகரித்து வரும் பொருட்களின் தட்டுப்பாடு, விலை உயர்வு என இலங்கை மக்களின் வாழ்வியலை அதலபாதாளத்துக்குள் தள்ளி இருக்கின்றது.

மஞ்சள் இல்லை, உளுந்து இல்லை, உரம் இல்லை என தொடங்கிய பொருளாதார நெருக்கடி காலப்போக்கில் வலுவடைந்து இரண்டு வருடங்களுக்கு மேலாக நீடித்து தற்போது, கத்தரிக்காய், புடலங்காய், பருப்பு, தேங்காய், சீனி, எரிவாயு, எரிபொருள், பாண், மாவு, அரிசி, பால்மா, இலத்திரனியல் பொருட்கள், சீமெந்து, கட்டடப் பொருட்கள், வாகனங்கள் என பட்டியல் நீண்டுபோய்க் கிடக்கிறது.

பார்த்துவிட்டுத் தருகிறேன் எனக் கேட்டாலும் பத்து ரூபாவை கையில் தர யாரும் தயாராக இல்லை. அனைத்துப் பொருட்களும் விண்ணை முட்டும் விலை, வறுமை, உணவுப் பஞ்சம் இதை நோக்கித்தான் இலங்கை பொருளாதாரத்தின் நிலை இருக்கிறது.

உள்நாட்டுக் குழப்பம், போர் என பாதிக்காலம் போன நிலையில், இன்று பொருளாதாரப் பிரச்சினையில் சிக்கித் தவித்து, நாட்டின் அரைவாசியை சீனாவிடம் அடகு வைக்கும் நிலைக்கு இலங்கை வந்து நிற்கின்றது. இந்தத் தீவிரப்போக்கை, முறையற்ற ஆட்சி, பொருத்தமான வல்லுனர்களின் திட்டமிடல் இன்மை ஆகியவற்றை மூடி மறைத்து கொரோனா சூழ்நிலை தந்த அவலம் என இலங்கை ஆட்சியாளர்கள் கதை விடுகின்றனர்.
இலங்கையின் பொருளாதாரத்தில் 10 வீதம் சுற்றுலாத்துறையின் மூலம் கிடைக்கிறது. இதைவிட முக்கிய ஏற்றுமதிப் பயிர்களான தேயிலை, இறப்பர், வாசனைத்திரவியங்கள், தைத்த ஆடைகள் போன்றவற்றின் ஏற்றுமதி மூலம் அந்நியச் செலவணி நாட்டுக்கு கிடைத்துக்கொண்டு இருந்தது. இந்த அந்நியச்செலவாணியை நம்பித்தான் இலங்கை இயங்கியது. இலங்கையின் மொத்த ஏற்றுமதியில் தைத்த ஆடைகளின் பங்கு 52 சதவீதமாகவும், தேயிலை ஏற்றுமதி 17 சதவீதமாகவும் இருக்கிறது.

2019ஆம் ஆண்டின் இலங்கையின் அந்நிய செலவாணி 1.1 சதவீதமாக இருந்த நிலையில் 2020 ஆம் ஆண்டில் -16.3சதவிகிதம் வீழ்ச்சி அடைந்தது. இதற்கு உலகளாவிய ரீதியில் உள்ள கொரோனா வைரஸ் தொற்று நிலைமை மிக முக்கிய காரணமாகப் பார்க்கப்படுகிறது. இந்த வைரஸ் தொற்று காரணமாக இலங்கைக்கான சுற்றுலாப்பயணிகள் வருகை மிக சடுதியாக வீழ்ச்சி நிலைக்கு சென்றமையே முக்கிய காரணமாகும்.

இதன் காரணமாக ஏற்றுமதித் துறை மிக கடுமையாகப் பாதிக்கப்பட்டது. குறிப்பாகச் சொல்லப்போனால்,

ஆடைத் தொழிற் சாலைகளின் கொரோனா வைரஸ் பரவல் கொத்தணி கொத்தணியாக உருவெடுத்து, ஆடைத் தொழிற்சாலைகளை முடக்கியது. இந்தக் கொத்தணி பெரும்பாலும் பல கிராமங்களையும் முடக்கியது. இதனால் சுற்றுலாத்துறை முடக்கம், ஆடைகள் ஏற்றுமதி சரிவு, தேயிலை ஏற்றுமதி இன்மை ஆகியவற்றால் அந்நியச் செலவாணி வருகை இல்லாமல் போனது. இந்தப் பொருளாதார நெருக்கடியும் பின்னடைவும் வெளிநாட்டு நிறுவனங்களையும், தொழில் முனைவோரையும் நாட்டைவிட்டு வெளியேற வைத்தது.

இலங்கை ஆட்சியாளர்களின் பொருளாதார அறிவின்மை நாட்டை மிக மோசமான நிலைக்கு தள்ளியுள்ளது. "கிடக்கிறது கிடக்கட்டும் கிழவியை தூக்கி மனையில் வை" என்பதுபோல நாடும் மக்களும் படும் துன்பங்களைக் கருத்தில் கொள்ளாது, ஆட்சியாளர்கள் கையிருப்பில் இருந்த அந்நிய செலவாணியை திட்டமிடல் இல்லாமல் தமது இஸ்டத்துக்கு செலவழித்துத் தீர்த்தனர்.

2021 ஆண்டின் ஆண்டிறுதி நிலவரப்படி 160கோடி அமெரிக்க டொலர்தான் இலங்கையின் அந்நியச் செலாவணியாகக் காட்டப்பட்டது, 730 கோடி டொலர் கடனையும் இலங்கை செலுத்த வேண்டும். இதில் 500 கோடி டொலர் சர்வதேசக் கடன் பத்திரங்களாக இருக்கின்றன.

கடந்த 10 ஆண்டுகளாக இலங்கை அரசு இருவிதமான பற்றாக்குறையைச் சந்தித்து வருகிறது. ஒன்று வர்த்தகப் பற்றாக்குறை மற்றையது நிதிப் பற்றாக்குறை. 2019ஆம் ஆண்டில் மட்டும் இலங்கையின் சர்வதேசக் கடன் 3,300 கோடிடொலராக இருந்தது. இந்தக் கடனைத் திருப்பிச் செலுத்தாமல் மேலும் மேலும் கடனை வாங்கியும், உள்நாட்டில் அதிகமான பணத்தை அச்சடித்து வெளியிட்டதாலும் மிகப்பெரிய பொருளாதாரப் பேரழிவை இலங்கை சந்தித்து வருகிறது.

காலப்போக்கில் இந்த நிலைமை சீர் செய்யப்படவில்லை எனில் இலங்கை சிறு தீவாக இல்லாமல் அதிக கடனை பெற்றுள்ள சீனாவின் மலசலகூடமாக மாறிவிடும் அபாயம் இருக்கிறது. தற்போதே இலங்கையில் சீனா தன் கடனுக்கு பதில் நாட்டில் குட்டி ஆட்சி நிலைமையை ஏற்படுத்தி இருக்கிறது "நக்குண்டார் நாவிழந்தார்" என்பதுபோல கேட்பதுக்கெல்லாம் பல்லிளித்துக்கொண்டு நிற்கவேண்டிய நிர்ப்பந்தத்தில் இலங்கையின் கடன் சுமையும் ஆட்சியாளர்களின் கையாலாகாத்தனமும் சீனாவிடம் மண்டியிட வைத்துள்ளது.

வெளிநாட்டுக் கடனில் பெரும்பகுதி சீனாவுக்குச் செலுத்த வேண்டியவை. சீனாவுக்கு மட்டும் இலங்கை 500கோடி டொலர் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டியுள்ளது. போதாக்குறைக்கு நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடியை நிவர்த்தி செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் 500மில்லியன் டொலர் கடனுதவியை வழங்க இந்தியா நடவடிக்கை எடுத்துள்ளது. இந்திய எக்ஸிம் வங்கி இந்தக் கடன் தொகையை வழங்கவுள்ளது. தற்போது 12 மாத தவணையில் 500 மில்லியன் டொலர் கடனை வழங்கும் ஒப்பந்தத்தில் வங்கியும் இலங்கை அரசும் கையெழுத்து வைத்துள்ளன.

தொடர்ச்சியாக கடனை வாங்கிக் குவிப்பதும், மேலதிகமாகப் பணத்தை அச்சிடுவதையும் ஒரு தீர்க்கமான முடிவற்று இலங்கை செய்வதால் நாளுக்குநாள் நெருக்கடி நிலைமை அதிகரித்து, விலைவாசி அதிகரிப்பு ஏற்பட்டு, பொருட்கள் தங்கத்தின் விலைக்கு எகிறி இருப்பதும், தங்கம் இலட்சங்களை தாண்டி இருப்பதும் மிக மோசமான சூழ்நிலையை தோற்றுவித்துள்ளது.

உணவுப் பற்றாக்குறை மக்களைப் பட்டினி நிலைக்கு தள்ளி உள்ளது. மக்கள் சவப்பெட்டிகளுடன் வீதிக்கு இறங்கி ஜனாதிபதி வாசஸ்தலத்துக்குள் அத்துமீறி நுழைந்து தமது எதிர்ப்பை காட்டி நிற்கின்றனர். பணவீக்கத்தின் அளவு இதுவரை கண்டிராத அளவு 11.1சதவீதமாக அதிகரித்துவிட்டது.

அரிசி, கோதுமை, பருப்பு, சீனி, பால்மா, செத்தல்மிளகாய், மரக்கறிவகைகள் என அத்தியாவசிய உணவுப் பொருட்கள் விலை விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்துள்ளது. இதனால் மிகப்பெரிய அளவுக்கு உணவுப்பொருட்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

கடந்த ஒகஸ்ட் மாதம் இலங்கை அரசு பொருளாதார அவசர நிலையைப் பிரகடனம் செய்தது. அத்தியாவசியப் பொருட்களின் விநியோகத்தை ஒழுங்கு படுத்துகிறோம் என இராணுவத்தை களமிறக்கிய ஜனாதிபதி மிகப்பாரிய நெருக்கடியை சந்தித்தார். தொடர்ந்தும் அளவுக்கு மீறிய பண அச்சடிப்பும் திட்டமிடாத தன்மையும் நாட்டிலும் மக்களிலும் கரிசனை கொள்ளாத அரசினால் நாடு முழுவதும் வங்குரோத்துநிலை நிலவுவதை மக்கள் பட்டினியில் இறப்பதன் மூலம்தான் இலங்கை அரசுக்கு உணர்த்த முடியும்போல உள்ளது.



# எது சரி? எதுவெல்லாம் சரி?

-யூலியஸ் அன்ரனி.



94வது ஒஸ்கர் விருது வழங்கும் விழாவில் தனது மனைவி குறித்து நகைச்சுவையாக பேசிய தொகுப்பாளரின் கன்னத்தில் ஓங்கி அடித்தார் ஹொலிவுட் நடிகர் வில் ஸ்மித். இந்த சம்பவம் உலகின் மிகப்பெரும் விருது விழாக்களில் ஒன்றான ஒஸ்கர் விழாவில் பரபரப்பை ஏற்படுத்தியது.

உலகளவில் சினிமாத் துறைக்கு வழங்கப்படும் மிக உயரிய விருதாக ஒஸ்கர் விருது கருதப்படுகிறது. 2022ஆம் ஆண்டுக்கான ஒஸ்கர் விருது வழங்கும் விழா லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் கடந்த ஞாயிறு 27.03.2022 அன்று நடந்தது. நிகழ்ச்சியை அமெரிக்காவின் பிரபல நகைச்சுவையாளனான கிறிஸ் ரோக் தொகுத்து வழங்கினார். அப்போது நடிகர் வில் ஸ்மித்தின் மனைவி ஜடா ஸ்மித்தின் மொட்டைத் தலை குறித்து நகைச்சுவைக்காக கிண்டலாக கிறிஸ் ரோக் பேசினார்.

ஜிஜ ஜேன் என்னும் திரைப்படத்தில் ராணுவ வீராங்கனையின் தோற்றம் மொட்டைத் தலையுடன் இருப்பது போன்று உருவாக்கப்பட்டிருக்கும். இதனை குறிப்பிட்டு, ஜிஜ ஜேன் படத்தின் 2ம் பாகத்திற்காக ஜடா காத்திருப்பது போல அவரது தோற்றம் உள்ளது என கிறிஸ் பேசினார். ஜடா பிங்கெட் ஸ்மித் அவர்கள் மிக பெரும் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார். அதன் விளைவே அவரது முடி உதிர்தலாகும். இவ்வாறு இருக்கையில் நிகழ்ச்சி தொகுப்பாளர் அவரது குறைபாட்டை சுட்டிக் காட்டியதால் கோபமான வில் ஸ்மித் மேடையேறி சென்று கிறிஸ் ரோக்கை ஓங்கி அறைந்தார். இது மண்டபத்தில் கூடியிருந்த அனைவரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. ஆனாலும் நிகழ்ச்சித் தொகுப்பாளர் கிறிஸ் கோபத்தை அடக்கி கொண்டு மீண்டும் நகைச்சுவையாக பேசினார். அலோபீசியா என்னும் நோயினால் முடியை இழந்து வருகிறார் ஜடா ஸ்மித். இப்படிப்பட்ட சூழலில் கிறிஸ் கிண்டல் செய்தது வில் ஸ்மித்தை கோபமடையச் செய்ததாகக் கூறப்படுகிறது.

2022ம் ஆண்டுக்கான ஆஸ்கர் விழாவில் சிறந்த நடிகருக்கான விருதை வில் ஸ்மித் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. தனது இந்த நடத்தைக்காக பின்னர் மன்னிப்பு கேட்டுள்ளார். அதை அவர் "ஏற்றுக்கொள்ள முடியாதது மற்றும் மன்னிக்க முடியாதது" என்றும் குறிப்பிட்டுள்ளார்.
"எந்த விதமான வன்முறையும் நச்சுத்தன்மை வாய்ந்தது மற்றும் அழிவுகரமானது என்று ஸ்மித் தெரிவித்துள்ளார்.

மிகப்பெரும் உலக அரங்கில் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி ஆழமாக பார்க்க வேண்டிய தேவை இங்கு உள்ளது. இரண்டு பக்கத்திலும் வன்முறை நிகழ்ந்துள்ளது. ஒரு பக்கம் தொகுப்பாளர் பகிடிவதை (Mobbing) செய்துள்ளார். இது ஒரு வகையான வன்முறை ஆகும். நோர்வே போன்ற நாடுகளில் இது மிகப் பெரிய குற்றமாகப் பார்க்கப்படுகிறது. அதற்கான தண்டனைகளும் அதிகமாக உள்ளன. அதிலும் ஒரு அரங்கில் நின்று ஒருவரது உடற் குறைபாடுகளை நகைச்சுவையாகப் பேசுவது நாகரீகமானது அல்ல. அது மிகப்பெரும் உளவியல் தாக்கத்தினைக் கொடுக்கும். அதேவேளை 2022ஆம் ஆண்டின் சிறந்த நடிகர் வில்ஸ்மித் தொகுப்பாளரை அரங்கில் அவ்வாறு தாக்கியமை மிகப்பெரும் வன்முறையாகும்.

தனது மனைவியைப் பெயர் குறிப்பிட்டுப் பேசியமையால் பாதிப்படைந்து இருப்பினும், அதனை இவ்வாறு கையால் அடித்து தாக்குதல் செய்து தீர்த்திருக்க வேண்டியதில்லை. நிகழ்ச்சி தொகுப்பாளருக்கான பதிலை வில் ஸ்மித் வார்த்தையால் கூறியிருக்கலாம். அரங்கேறியவர் ஒரு ஒலிவாங்கியை எடுத்து வார்த்தையால் தனது ஆதங்கத்தினை வெளிப்படுத்தி இருப்பின் இன்று அவர் உலக அரங்கில் பெரும் நடிகனாக மட்டுமல்ல, சிறந்த மனிதனாகவும் கருதப்பட்டிருப்பார். □

# சிறிலங்காவின் தேசியத் தற்கொலை -Siraj Mashoor-

*இந்தப் பெயரில் எழுத்தாளர் பிரமிள் (தர்மு சிவராம்) ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். அவர் எப்போதோ இறந்து போயிருந்தாலும், புத்தகத்தின் தலைப்பு இப்போது நன்றாகப் பொருந்தி வருகிறது.*

*தினமும் ஓரிரு மணித்தியாலங்களாகத் தொடங்கிய மின்வெட்டு, இன்று 10 மணித்தியாலங்கள் என்றாகி விட்டது. இங்கு இன்றைய மின்வெட்டு நேரம்: காலை 8.00 - பகல் 2.00 மணி வரை முதல் கட்டம். பின்னர் மாலை 6.00 - இரவு 10.00 மணி வரை அடுத்த கட்டம். முந்திய நாளே மின்வெட்டு நேரத்தை அறிந்து, அதற்கேற்ப வேலைகளைத் திட்டமிட வேண்டிய நிலை.*
*இன்று எந்த வேலையும் ஓடும் போல தெரியவில்லை. இந்தக் கடும் கோடையில் மின்வெட்டைத் தாங்கி வாழ்ந்துதான் ஆக வேண்டும்.*

*மருந்துப் பொருட்கள் இல்லாததால், அத்தியாவசிய சத்திர சிகிச்சை தவிர்ந்த ஏனைய அனைத்து சத்திர சிகிச்சைகளையும் நிறுத்துவதாக, பேராதனை போதனா வைத்தியசாலை* (Peradeniya Teaching Hospital) *நிர்வாகம் நேற்று அறிவித்திருந்தது.*

*அப்படி அறிவித்து சில மணி நேரங்கள் கூட செல்லவில்லை. உடனடியாக மருந்துப் பொருட்களைத் தருவதாக, மருத்துவ வழங்கல் பிரிவு* (Medical Supplies Division) *அறிவித்தது.*
*இந்த செய்தியைப் பார்த்த இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர், கவலைக்குரிய இந்த நிலைக்கு எப்படி தங்களால் உதவ முடியும் என்று ஆராய்ந்து பார்க்குமாறு, இங்குள்ள இந்தியத் தூதுவரை கேட்டிருக்கிறார்.*

*அண்டை நாட்டின் உதவிக் கரமா பூகோள அரசியல் தலைநீட்டும் அவலமா என்று யோசிக்க வேண்டிய நிலை. கொஞ்சக் காலமாக இங்கு சீனாதான் தலைப்புச் செய்திகளில் அடிக்கடி அடிபடும். சமீப நாட்களில் இந்தியாவின் பெயர் மீண்டும் அடிபடத் தொடங்கியுள்ளது.*
*வெளிநாடுகளிடம் பிச்சையெடுக்கும் நாடாக இலங்கையை மாற்றி விட்டார்கள் என்கிறார் தோழர் அனுர. கடன் கேட்டிருக்கும் நாடுகளின் பட்டியலையும் அவர் சொல்லிச் செல்கிறார்.*
*வீட்டில் புயள முடிந்து சில வாரங்கள் சென்று விட்டன. விறகடுப்பிலும் மின்சார அடுப்பிலும் ஒரு மாதிரியாக சமையல் வேலைகள் ஓடின. பொறுத்திருந்து பார்த்தால் தீர்வு கிடைக்கும் போல இல்லை. நீண்ட வரிசைகளில் காத்திருந்துதான்* Gas *வாங்கியாக வேண்டும் என்ற நிலை.*
Gas *தேடி நேற்று வேகா வெயிலுக்குள் 30 கிலோ மீற்றர் தூரம் அலைய வேண்டி வந்தது. இதற்கு முன் இரண்டு முறை முயற்சித்தும் சமையல் எரிவாயுவைப் பெற முடியவில்லை. நோன்பு வருகிறதே என்பதால்தான் எரிவாயுவைத் தேடி அலைய வேண்டி வந்தது.*

*இது இப்படி இருக்க, பேரீத்தம் பழத்திற்கு விதிக்கப்பட்ட விசேட பண்ட வரியான 200 ரூபாவை, 1 ரூபாவாக மாற்றியிருப்பதாக செய்திகள் சொல்கின்றன. அதுவும் 20 ஆம் திருத்தத்திற்கு கைதூக்கி, அரசுக்கு முட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களது கோரிக்கையின் பேரில்தானாம் இந்த சலுகை.*

*பேசாமல் அந்த ஒரு ரூபாவை இந்த எம்.பிக்களுக்கே பிச்சை போட்டால் என்ன?*
*நோன்பு துறக்க ஈச்சம்பழம் தேவையில்லை. 3 மிடறு பச்சைத் தண்ணீர் போதும் மகாஜனங்களே.*

*சிராஜ் மஷ்ஹூர்*
*30.03.2022*




*சென்னை கலைக்குழு இயக்குநர் தோழர் பிரளயனின் “வீராயி” அரங்காற்றின் ஒரு காட்சி.*
(படம்: தோழர் மணிசுந்தரம்)



**-அ.ராமசாமி-**

*சர்வதேச அரங்காற்று நிறுவனம்* (International Theatre Institute) *ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 27ஆம் தேதியை உலக அரங்காற்று தினமாக* (world Theatre day) *கொண்டாடி வருகிறது.*

*1961இல் சர்வதேச அரங்காற்று நிறுவனத்தின் தலைவராக இருந்த ஆர்வி கிவிமா, பின்லாந்தில் செயல்பட்ட அந்நிறுவனத்தின் சார்பில் அரங்காற்று நிகழ்வுகளுக்காக ஒரு தினத்தைக் கொண்டாட வேண்டும் என முன் மொழிந்தார். 1961 இல் கூடிய அரங்காற்றுக் கலைஞர்களின் மாநாட்டில் அந்த நாள் மார்ச் 27 என உறுதி செய்யப்பெற்றது. கிவிமாவின் முன்மொழிதலை ஏற்றுக் கொண்ட ஸ்காண்டிநேவிய மையம் ஒவ்வோராண்டும் பெருமையோடு நடத்திக் கொண்டு வருகிறது. அந்த நிறுவனத்தோடு உலகத்தின் பல்வேறு மூலை முடுக்குகளில் செயல்படும் நாடகக்காரர்களும் இணைந்து கொண்டு அந்த நாளைக் கொண்டாடத் தவறுவதில்லை.*

*புதிய நாடகங்களை நிகழ்த்துதல், கருத்தரங்குகள், மாநாடுகளை நடத்துதல் என அரங்கியலாளர்கள் திட்டமிடுவார்கள். ஒவ்வொரு ஆண்டும் அந்த ஆண்டிற்கான அரங்கியல் செய்தியை அளிப்பதற்கு ஒரு அரங்கியலாளனைத் தேர்வு செய்வது தான் அந்த நாளின் முக்கியத்துவம். ஒவ்வொரு ஆண்டும் உலக அரங்கநாளுக்குச் சிறப்புச் செய்தி வழங்கும் பெருமையைப் பெறப்போகும் நாடகக்காரர் யார் என்பது ஆவலோடு*

எதிர்பார்க்கப்படும் ஒன்று. நோபல் விருதுக்குரியவரைப்போல, அரங்கநாள் செய்தியை வழங்கப்போகும் ஆளுமை கண்டறிந்து சொல்லும் ஹெய்சிங்கியின் உலக அரங்கியல் நிறுவனம் அறிவிக்கும். தேர்வு செய்யும் பொறுப்பைத் தன்வசம் வைத்திருக்கும் சர்வதேச அரங்காற்று நிறுவனம் யாரைத் தேர்வு செய்கிறது என ஒவ்வொரு அரங்கியலாளனும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பான். தேர்வு செய்யப்பட்டவர் உலக சமாதானப் பண்பாட்டிற்கு அரங்கியல் ஆற்றவேண்டிய செய்தியை வழங்குவார்.

தேர்வு செய்யப்படும் அரங்கியல் ஆளுமையால் எழுதப்படும் நாடகதினச் செய்தி 20க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழி ஆக்கம் செய்யப்பட்டு ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் முன்னால் வாசிக்கப்படும். வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள்கள் என அனைத்து ஊடகங்கள் மூலம் பரப்படும் அரங்கியல் செய்தியை அனைத்துக் கண்டத்து மக்களும் கேட்டுப் பரிமாறிக் கொள்ளும்போது அன்பையும் அமைதியையும் பரிமாற்றம் செய்யும் உணர்வு நிலையை உருவாக்குவார்கள்.

இந்த நாளை ஒவ்வொரு நாட்டிலுமுள்ள அரங்க விரும்பிகளும் நாடக நிகழ்வுகளின் தொடக்கமாக நினைக்கின்றனர். அதன் முனைப்பு காட்டுபவர்கள் பாரிஸ் நகரத்தினர். இப்போது ஏறத்தாழ 100 கிளைகளைக் கொண்டிருக்கும் சர்வதேச அரங்காற்று நிறுவனங்கள் அந்நாளைக் கொண்டாடத் தவறுவதில்லை. முதல் ஆண்டிற்கான(1962) செய்தியை எழுதியவர் பிரெஞ்சு நாட்டின் ழான் காக்தோ. அந்த நிகழ்வு நடந்தது ஹெல்சிங்கியில்.

## கோவிட் கால அரங்காற்றுக் கொண்டாட்டங்கள்

மேடைநிகழ்வுகளால் கொண்டாட்டமாகத் திகழும் அரங்காற்றுதினக் கொண்டாட்டங்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் கோவிட் 19 தாக்கத்தால் பொலிவிழந்துவிட்டன. பெரும்பாலான நிகழ்வுகள் இணையவழி உரைகளாக மாறிப் போய்விட்டன.

## 2020- பாகிஸ்தானின் ஷாஹித் நதீம்:

ஷாஹித் நதீமின் நாடகங்கள் சமூகப் பொறுப்பும் ஆவேசமும் கொண்டவை. மத தீவிரவாதம், பெண்களுக்கு எதிரான வன்முறை, சிறுபான்மையினருக்கு எதிரான பாகுபாடு, கருத்துச் சுதந்திரம், காலநிலை, அமைதி சூஃபித்துவம் போன்றவற்றைப் பேசும் அவரது எழுத்துகளும் செயல்பாடுகளும் உலக அளவில் மதிக்கப்படுபவை. அவரது பல நாடகங்கள் தெற்காசியாவின் பிரிவினைவாதச் சிக்கல்களுக்கான தீர்வை முன்வைப்பவை. அத்தோடு இப்பகுதியின் பண்பாட்டு மரபையும் கவனப்படுத்துபவை. சமகாலச் சமூக மற்றும் அரசியல் பொருண்மைகளை பாரம்பரிய வடிவங்கள் மற்றும் நாட்டுப்புற வடிவங்களுடன் திறமையாக இணைத்து பொழுதுபோக்கு மற்றும் அறிவார்ந்த தூண்டுதலான நாடகத்தை முன்வைக்கும் ஆளுமை. மரபு இசை அவரது நாடக தயாரிப்புகளில் உள்ளார்ந்த பகுதியாக இருந்து வருகிறது. லாகூரின் அஜோகா இன்ஸ்டிடியூட் ஆப் பெர்ஃபோர்மிங் ஆர்ட்ஸ் மற்றும் கலை மற்றும் கலாச்சார நிறுவனத்தில் எழுத்து கலையை கற்பிக்கும் ஆசிரியராகப் பணியாற்றுகிறார் நதீம்.

ஷாஹித் நதீமின் நாடகங்கள் பாகிஸ்தானிலும் இந்தியாவிலும் மேடையேறியுள்ளன.அவரது நாடகங்களை மேடையேற்றிய குழுக்கள் உலகநாடுகள் பலவற்றில் உள்ளன.இங்கிலாந்து நாட்டின் லண்டன் நகரத்து ஹம்மர்ஸ்மித், ஸ்காட்லாந்து நாட்டு கிளாஸ்கோ, டென்மார்க்கின் ஹெல்சிக்னர் மற்றும் டேவிஸ் சென்டர் ஃபார் பெர்பார்மிங் ஆர்ட்ஸில் உள்ள அமிரிகா சாலோ, நோர்வேயின் ஒஸ்லோ நகரத்து பிளாக் பாக்ஸ் அரங்கக் குழு, போன்றன மேடையேற்றியுள்ளன. அமெரிக்காவின் வாஷிங்டன் நகரத்து ஜார்ஜ்டவுன் பல்கலைக்கழக அரங்கியல் துறை மட்டுமல்லாமல், அமெரிக்காவின் புர்கவகன்சா பிராவோ ஃபார் வுமன் தியேட்டரில் (சான் பிரான்சிஸ்கோ), நெடுஞ்சாலைகளில் (சாண்டா மோனிகா) மற்றும் தியேட்டர் ரோ (நியூயார்க்) மற்றும் தாரா லிட்டில்டன் தியேட்டரில் (இங்கிலாந்து) மற்றும் தாரா வட கரோலினா பல்கலைக்கழகம், போன்றவைகளும் மேடையேற்றியுள்ளன.

பிரிக்கப்படாத காஷ்மீரின் சோபூரில் 1947 இல் பிறந்த ஷாஹித், தனது முதல் வயதில் பாகிஸ்தானில் அகதிக்குடும்பம் ஒன்றின் குழந்தையாக லாகூருக்குப் போனவர். பாகிஸ்தானின் பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் உளவியல் பட்டம் பெற்ற அவர் தனது முதல் நாடகத்தை எழுதியபோது மாணவராகவே இருந்தார். தனது அரசியல் செயல்பாடுகளுக்காக நாடு கடத்தப்பெற்ற ஷாஹித் இப்போது லண்டனில் தனது மனைவியோடு வசித்துவருகிறார். அவரது நாடகங்களை மேடையேற்றும் புகழ்பெற்ற அஜோகா குழுவினருக்காக 50-க்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதியதோடு, அரசியல் நாடகக் கோட்பாட்டை உருவாக்கிய ஜெர்மன் நாடகாசிரியர் பெர்ட்டோல்ட் பிரெக்டின் நாடகங்களைத் தழுவல் நாடகங்களாக மாற்றியும் தந்துள்ளார்.

எல்லைகள் கடந்த அரங்கச் செயல்பாட்டாளர்கள் அமைப்பின் உறுப்பினராக இருக்கும் அவர் உலக அமைதிக்கான அமைப்பின் ஆசிய - பசிபிக் பிரிவின் தகவல் தொடர்பு அதிகாரியாகவும், பாகிஸ்தான் தொலைக்காட்சியின் நாடகத் தயாரிப்பாளராகவும் இருந்தவர். பாகிஸ்தானின் ராணுவ ஆட்சிகளை எதிர்த்ததற்காக மூன்றுமுறை சிறை சென்றவர்
அவரது நாடகங்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு ஆக்ஸ்போர்டு யுனிவர்சிட்டி பிரஸ்மூலம் வெளியிடப்பட்டுள்ளன. 2009 ஆம் ஆண்டில் செயல்திறன் பெருமைக்காக பாக்கிஸ்தானின் உயரிய பதக்கத்தைப் பெற்றவர். இந்தியா மற்றும்

பாக்கிஸ்தானில் அமைதி விழாக்களுக்கான நாடகவிழாக்களை ஏற்பாடு செய்துள்ளார். லாகூர் அருங்காட்சியகம், பஞ்சாபி பழக்கவழக்கங்கள், கவிஞர் இக்பால் மற்றும் ஓவியர் சாடேகெய்ன் உள்ளிட்ட பண்பாட்டுப் பொருண்மைகளில் ஆவணப்படங்களையும் அவர் தயாரித்துள்ளார்.

## 2021 - பிரிட்டானியாவின் ஹெலன் மிர்ரன்

சென்ற ஆண்டைப்போலவே இந்த ஆண்டும் இணையவழி நிகழ்வுகளே ஒருங்கிணைக்கப்படுகின்றன. உலக அரங்கியல் நாள் நிகழ்வின் உச்சம் அந்த நாளில் தரப்படும் செய்தியும் அதனை வழங்கும் அரங்க ஆளுமைத் தேர்வும் தான். இந்த ஆண்டுக்கான அரங்கியல் ஆளுமையாகத் தேர்வு பெற்றுள்ளவர் ஹெலன் மிர்ரன்.
அரங்கியல், சினிமா, தொலைக்காட்சி என ஒவ்வொன்றின் தொடர்ச்சியிலும் தனது நடிப்பின் மூலம் அரங்கியல் வாழ்க்கைய வாழ்ந்துவரும் ஹெலன் மிர்ரன் நடிப்புக்காகப் பல விருதுகளைப் பெற்றவர். தி குயின் படத்தில் நடித்ததற்காக 2007இல் அகாடெமி விருது பெற்றவர் என்பது அவர் பெற்ற உயரிய விருது. இந்த ஆண்டு அரங்கியல் நாள் செய்தியை வழங்கப்போகும் ஹெலன் மிர்ரனின் வாழ்க்கைக் குறிப்பின் சுருக்கத்தை வெளியிட்டுள்ளது அதற்குப் பொறுப்பான குழு.

பிரிட்டானியாவில் செயல்பட்ட தேசிய இளைஞர் அரங்கத்தில் கிளியோபாட்ராவாக நடிப்பதில் தொடங்கிய அவரது நாடக வாழ்க்கை மான்செஸ்டர் குழுவின் சார்பாளராக மாறினார். பின்னர் ராயல் ஷேக்ஸ்பியர் நாடக க்குழுவில் நான்கு ஆண்டுகள் நடிகையாகத் தொடர்ந்துள்ளார். அதன் பிறகு புகழ்பெற்ற பீட்டர் புருக்கின் அரங்கியல் ஆய்வு மற்றும் சோதனைக் கூடத்துடன் இணைந்து பணியாற்றியுள்ளார். அந்நாடகக்குழுவின் ஆப்பிரிக்க, அமெரிக்கப் பயணங்களில் நடிகையாகப் பயணம் செய்துள்ளார். அப்பயணத்திற்குப் பின் வெவ்வேறு நாடுகளிலிருந்து அழைப்புகள் கிடைத்துள்ளன. தி வெஸ்ட் எண்ட், தி ஃப்ரிஞ்ச், ஆர்.எஸ்.சி, நேஷனல் தியேட்டர் ஆகியனவற்றின் அழைப்போடு, அமெரிக்காவின் பிராட்வேயில் ஒருமாதம் தங்கியிருக்கும் வாய்ப்பும் கிடைத்துள்ளது.

அந்த வாய்ப்புகளில் வெகுமதிகளும் கிடைத்துள்ளது. டோனி நிறுவன நியமனம், தி டான்ஸ் ஆப் டெத் என்ற மரியாதை போன்றன அவற்றுள் குறிப்பிடத்தக்கன. அவர் ஏற்று நடித்த குறிப்பிடத்தக்க பாத்திரங்கள் மூலம் ஆலிவர் விருதுக்கான சிறந்த நடிகை என்ற பட்டத்திற்குப் பரிந்துரைக்கப்பட்டார். திரும்பவும் 2009இல் தேசிய நாடகக்குழுவில் இணைந்து நிக்கோலஸ் ஹைட்னர் உருவாக்கிய ரேசினெவின் பெட்ரா என்ற பாத்திரத்தில் நடித்தார். அந்த மேடை நிகழ்வு பிரிட்டானியாவின் தேசிய தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பப்பட்ட முதல் நாடக நிகழ்வு என்பது குறிப்பிடத் தக்கது. கடைசியாக அவர் நடித்த குறிப்பிடத்தக்க பாத்திரமாகச் சொல்லக்கூடியது 2013இல் லண்டன் வெஸ்ட் எண்டின் இரண்டாம் எலிசபெத் மகாராணி. ஸ்டீபன் டால்ட்ரி இயக்கிய அந்நாடகத்திற்கு பீட்டர் மார்கன் பார்வையாளராக வந்திருந்தார்.

சிறந்த நடிகை என்பதற்காக ஆலிவர் விருது, டோனி விருது பெற்ற ஹெலன் மிர்ரன் இப்போதும் நடித்துக்கொண்டிருக்கும் ஒரு நடிகை என்பது குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று.

இந்தக் குறிப்பைத் தருகின்றபோது தொடர்ச்சியாகக் கடந்த ஆண்டுகளில் நான் எழுதிய குறிப்புகளையும் நினைவூட்டுகின்றது முகநூல். அந்நினைவூட்டல்களின் வழியாக நினைவலைகள் 1978 இல் அமெரிக்கன் கல்லூரி மாணவப்பருவத்திற்குச் செல்கிறது. பேராசிரியர் சாமுவேல் சுதானந்தாவின் மாணவனாக அவர் ஒருங்கிணைக்கும் மேடை நிகழ்வுகளுக்குப் பொறுப்பாளர்களில் ஒருவனாக இருந்தேன். திரைப்பட நடிகர் விவேக்.'.விவேகானந்தன் அப்போது ஒரு பல்குரல் பேச்சுக்கலைஞன். கல்லூரி மேடைகளிலும் பிறகல்லூரிகளின் போட்டி மேடைகளிலும் சென்று கலந்துகொண்டு கல்லூரிக்காக விருதுகளைப் பெற்றுத்திரும்பிய நாட்கள்.

அப்போது முதல் மேடை நிகழ்வுகளோடு தொடர்பில் இருந்த நான் 1981இல் நிஜநாடக இயக்கத்தில் சேர்ந்தது தொடங்கிப் பத்தாண்டுகள் மதுரையிலும் அடுத்து எட்டாண்டுகள் புதுவையிலும் நாடகக்காரனாக இயங்கிய காலம். இந்திய அரசின் மாநில, மண்டல, தேசிய விழாக்களின் நாடகங்களில் பங்கேற்றும், பார்வையாளனாக இருந்தும் நாடகக் கலையைக் கற்றுக்கொண்ட காலம் அது.

புதுவை நிகழ்கலைப்பள்ளி 1988இல் தொடங்கப்பட்ட து என்றாலும் உலக நாடக நாள் நிகழ்வுகளைக் கொண்டாட்டமாக்கிய ஆண்டு 1990இல் தான்.

சங்கரதாஸ் சுவாமிகள் நிகழ்கலைப்பள்ளியின் முன்னால் உள்ள சாலையை அரங்கவெளியாகப் பயன்படுத்தித் தனிநடிப்பு, நடன நிகழ்வு, குறுநாடகங்கள் என மேடையேற்றியது. நான் எனது பல்லக்குத்தூக்கிகளை அங்கு மாணவர்களை நடிகர்களாக்கி மேடையேற்றினேன். அதன் பிறகு ஒவ்வொரு ஆண்டும் அங்கு நாடகநாள் கொண்டாட்டங்கள் தொடர்ந்தன. 1997இல் திருநெல்வேலிக்குத் திரும்பிய பிறகு அரங்கக் கலையின் செயல்பாடுகளிலிருந்து விலகிப் பார்வையாளனாகவும் அது குறித்து எழுதும் எழுத்தாளனாகவும் மாறிப்போன நினைவுகளும் வந்துபோகின்றன.
அரங்கியல் கலைஞர்கள் அனைவருக்கும் அரங்கியல் நாள் வாழ்த்துகள் □

# வருகின்ற, வரப்போகின்ற நிலைமைகளுக்குள் நேர்மறையாக வழமையாகுதல் அல்லது பழக்கமாகுதல்:

**அம்ரிதா ஏயெம்**



இலங்கையின் தற்போதைய நிலைமை நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட ஒன்று. அதற்கு பல காரணங்கள். அந்தக் காரணங்களைப் பற்றி இங்கு பேசப்போவதில்லை. மாறாக இந்த நிலையில் எங்களை எவ்வாறு தகவமைத்துக்கொள்ள வேண்டும் என்பதைப் பற்றி சிலவற்றைத் தெரிவிக்கலாம் என நினைக்கின்றேன்.

இந்த நிலைமை உடனடியாக மாறப் போவதுமில்லை. எங்களால் உடனடியாக மாற்றக்கூடியதும் இல்லை என்பதை உணர்ந்து, நேர்மறையாக அடுத்து வருகின்ற நாட்களின் வாழ்க்கை முறைகளை எவ்வாறு மாற்றியமைக்கலாம் என்பதை கவனமாக திட்டமிடுதல் வேண்டும்.
பல இடங்களில் பகல் 2.00 மணிக்கு நிறுத்தப்பட்ட மின்சாரம் இரவு நள்ளிரவு தாண்டி மீண்டும் வருகின்றது. வருகின்ற நாட்கள் சில வேளை இதனைவிடவும் மோசமாக இருக்கலாம். எனவே மின்சாரம் வரும்வரை விழித்து, காத்துக்கொண்டிருந்து வேலைகளைச் செய்யாமல், மின்சாரத் தடைக்குள்ளேயே நாளாந்த வேலைகளை செய்ய எங்களைத் திட்டமிடல் வேண்டும்.

போத்தல் விளக்குகள், சிமினி விளக்குகள், அரிக்கன் விளக்குகள் போன்றவற்றை பாவிக்கத் (அதற்கும் லாம்பு எண்ணெய் வேணும். அதற்கும் தட்டுப்பாடு) தொடங்க வேண்டும். அதற்குரிய மனத்தடைகளை அகற்ற வேண்டும். நாங்கள், எங்கள் தாய், தந்தை, பாட்டன், பூட்டன் எல்லோரும் இப்படியான சூழல்களை வெற்றிகொண்டு வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும்.

உரிய நேரத்திற்கு, கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளும், உணவு உட்கொள்ளுதலும் நடை பெற வேண்டும். நேர காலத்துடன் தூங்கச் செல்வதற்கு பழக்குதலும் வேண்டும். (மின்சாரம் இல்லை. மின்விசிறி இல்லை. காற்று இல்லை. நித்திரை இல்லை. முன்னர் மரங்கள் இருந்தன. விசாலமான இடம் இருந்தது. குளிர்மை இருந்தது. நித்திரையும் இருந்தது). அவர்களுக்குள் நேர்மறையான எண்ணங்களை விதைக்க வேண்டும். இருக்கின்ற வளங்களை எவ்வாறு சிறப்பாக பயன்படுத்துவது என்பதை அந்தச் சிறுவயதில் கற்றுக்கொடுக்க வேண்டும். உங்களது எதிர்மறையான எண்ணங்களை அவர்களுக்கு தொற்றச் செய்யாதீர்கள்.

மாணவர்களையும், சிறுவர்களையும் காட்டுக்கு கூட்டிச் சென்று கற்பிக்கின்ற முறை ஒன்றுள்ளது. கற்றலுக்கு அப்பால், அதன் முக்கிய நோக்கமே கடினங்கள் பற்றி அவர்களை உணரச் செய்வதும், இவ்வாறான கடினங்கள் வாழ்க்கையில் ஏற்படும்போது அவற்றை எவ்வாறு எதிர்கொள்வது? என்பது பற்றிய அனுபவங்களை பெறுவதுமேயாகும்.

உங்கள் பிள்ளைகளை அரசு ஏற்படுத்திக் கொடுத்த காடுகளுக்குள் அல்லது வேறு காடுகளுக்குள் அழைத்துச் சென்றிருக்கின்றீர்கள். கற்றுக்கொடுங்கள். எதிர்காலத்தை எதிர்கொள்வதற்கான சிறப்பு பயிற்சிகளை கொடுங்கள். இந்த வனச்சூழலை கொண்டாட்டமாக மாற்றுங்கள்.

சந்தர்ப்பங்களும், காலங்களும், நேரங்களும் பெரும்பாலும் ஒரே மாதிரியாக இருந்தாலும் அவற்றை எவ்வாறு பயன்படுத்திக்கொள்கின்றோம் என்பதிலேயே வெற்றி தங்கியிருக்கின்றது. நேர்மறையாக சிந்திப்போம்! தேவைகளைக் குறைப்போம்!! மகிழ்ச்சியாக வாழ்வோம்.!!!

March 21

# உலகக் கவிதை நாள் World Poetry Day




“ஆசியாவின் ஆச்சரியம்” மட்டுமல்ல
உலகின் ஆச்சரியமும் கூட
ஒரே நாளில்
ஒரு பவுணின் விலை 40 ஆயிரத்தால் கூடியது
எரிவாயு இரண்டாயிரத்தால்
மஞ்சள் நான்காயிரத்தால்
மிளகாய் எண்ணூறினால்
சீனி, பருப்பு, வெங்காயம்
எல்லாமே எட்டமுடியாத உயரத்தில்...

நம்மட “சகோதரர்களின்” ராஜ்ஜியத்தில்
எல்லாமே ஆச்சரியம்தான்
அவர்களே ஆச்சரியத்திலும் ஆச்சரியமான
பிறவிகள் அல்லவா

ஆச்சரியமானவர்களின் ஆட்சியில்
எல்லாமே ஆச்சரியம்தான்

சனங்களோ தெருவில்
க்யூவில்
இருளில்

இலங்கை ஒரு அற்புத தேசம்
ஒரு போது தீயில் எரியுண்டது
இப்போது இருளில் சிறையுண்டது □

நாட்டை ஒரு குடும்பத்தின் காலடியில் வைத்தோமல்லவா
அந்தப் புத்திசாலித்தனத்துக்கு வெகுமதி
நாளொன்றுக்கு பத்து மணி நேர மின்வெட்டு

தினமும் ஏறியும் எகிறியும்
சென்று கொண்டிருக்கும் விலையேற்றம்

நீருக்கு, நெருப்புக்கு, பெற்றோலுக்கு, எரிவாயுவுக்கு
அரிசிக்குப் பருப்புக்கு சீனிக்கு என நீளும் க்யூவில்
நிற்றல்

உலகம் ஒளிமயமான காலத்தில் இருக்கும்போது
நாமோ இருளில் இருக்கப் பிரியப்படுகிறோம்.
இரண்டும் இரண்டும் நான்கு என்பதில் என்ன
புதினமுண்டு
இரண்டும் மூன்றும் இரண்டரை என்பதல்லவா புதினம்
வித்தியாசங்களுக்காகவும் ஆச்சரியங்களுக்காகவும்
இலகுவாக்கங்களைக் கடினமாக்கம் செய்து
கொண்டிருக்கிறோம்

இந்த மாதிரி நம்முடைய புத்திசாலித்தனத்துக்கு
100 மதிப்பெண்கள் என நாமே வழங்கிக் கொள்வோம்

நாட்டையே ஒரு குடும்பத்தின் காலடியில்
வைத்தோமல்லவா
அந்தப் புத்திசாலித்தனத்துக்கு வெகுமதி
க்யூ
க்யூ
க்யூ
இருள்
இருள்
இருள்

வயலில் விளையும் தரிசு
கடலில் முளைக்கும் முள்
வயிற்றில் எரியும் தீ □

(30.03.2022)



# நேதாவின் ஒரு கவிதை

நீண்ட தூரத்துக்கு நடந்து சென்று
எல்லாக் கவலைகளையும் மறந்து விடலாம்
என்று நடந்து கொண்டிருக்கிறேன்

திரும்பி வர ஆசைகொள்ளாத நிலத்தினைக் கடந்து
நடந்து கொண்டிருக்கிறேன்

திரும்பத் திரும்ப என் இருதயம் நடுங்க வலிதந்தவர்களை விட்டு
நடந்து கொண்டிருக்கிறேன்

என் தலைக்கு மேலாக பறந்து
என்னோடு புலம்பெயரும் கூழைக்கடா பறவையொன்றின் துணை அப்போது
ஆறுதாலாய் இருந்தது

குமுறும் துன்பத்தின் பாரங்களை
வழிநெடுக்கிலும் இறக்கி நடக்கும்
வழிப்போக்கன் நான்

என் சுவடுகளின் பின் யாரும்
என் பாதைகளின் பின் எவரும்
என்னைத் தொடரச் சாத்தியமற்ற நிறைந்த பயணம்

என்னை அழுத்தும் துயரங்கள்
இந்த பூமியை விட பருமனாக இருக்கிறது
ஓசையில்லாமல் உலாத்தும் என் வறண்ட நிலத்தின் காலடி குறிப்புக்கள் இவை

பின்னால் அழைக்கும் குரல்கள்
கேட்டுக்கொண்டுதான் இருக்கிறது
அந்த ஓயாத குரல்களை
என் கண்ணீர் விழுங்கிக்கொண்டிருக்கிறது
அவ்வளவு விடாய் அதற்கு

# ஜமீல் கவிதைகள்



மின்சாரம் மாயமான
கோடை மதியம்
தாங்கொணா வெம்மையில்
வியர்த்துச் சொட்டும்
மகவின் அவிச்சல் கண்டு
கழிவிரக்கமுறுகிறது மனம்
கனன்று கிடந்த பனுவலின்
அட்டை கொடுத்து
சுயமாக வீசச் சொல்கிறேன்
உடன் ஓடோடிச் சென்று
விறகோடு விறகாக எரிந்து
அசதியில் சாயும்
அம்மாவிற்கு விசிறி
அவிச்சலை தணித்தாள் சிறுமி
மகவின் எல்லையற்ற
அன்பினில் கரைகையில்
ஒரு கணம் நானும் காற்றானேன்
இப்போது வீடு முழுவதும்
மகவின் சாயலில்
பறந்து திரிகிறது இதமான காற்று

**காலம் மறுக்கா விடியல்**

யார் மூட்டிய தீயோ
கொழுந்து விட்டெரிந்து தனிந்தது
மரங்களின் பண்ணை
எரி சரங்களினிடை சிக்கி
தீக்கிரையாகி கருகிப் போயின
கூண்டோடு பட்சிகள்
எஞ்சிய விலங்கு பறவைகளின்
கத்தலும் கதறலும்
காற்றை ஊடுருவி ஓயாது கேட்கிறது
வெந்து தனிவதற்கிடையில்
சாம்பல் மேட்டை புரட்டிப் போட்டபடி
கிளர்ந்தெழுகிறதோர் விதை
அதன் முதல் துளிரின் பசுமை
புதியதோர் வனத்தை நிறுவும்
பிரகாசமானதோர் ஒளியை
எனக்குள் விதைக்காமலில்லை
யாருடைய புலரியையும்
ஒரு போதும் மறுத்திடாது காலம்
0

**மாந்தரிலேது பிச்சி**

காலைக் கதிரில் மின்னும்
நெல் மணிகளென்றும்
காற்றில் பறக்கும் பதரென்றும்
நம்மிடை ஏற்றத் தாழ்வுகளேதடா
வறியார் கண்டிங்கு
வஞ்சனை புரியும் உன்னிடம்
நிதம் காலைச் சுற்றி
வாலையாட்டி நன்றி சொல்லும்
நாயின் குணமுண்டோ
நெடி நிரம்பிய பைதனை
சுமந்தலைந்து திரிவதனால்
நீயுமிங்கு மலக் குழி தானடா
நாடி பிரிந்து போன பின்னே
நின்னை எடை போட்டு
புதைப்பதிங்கு எங்கணம் தகுமடா
புதைத்ததுமே தோண்டியெடுக்க
நீயென்ன தங்கக் கழுத்தாரமடா
சருகுகள் உதிர்ந்திங்கு
பட்சிகளின் கூடுகளானதடா
நின் உயிரறுந்து போனதுமே
வெறும் கூடுதானானயடா
வறுத்த நிலக்கடலையென வீசிவிட
மாந்தரில் பிச்சிகளுண்டோ காண்
0

# அறுபத்து மூன்று முஸ்லிம் பெண் படைப்பாளிகளின் கவிதைகள் அடங்கிய ஒரு தொகுப்பு

-Mia Jabaar-




இன்று திகதி முப்பத்தியொன்று. ஒரு மாத காலத்திற்குப் பின்னரான குறிப்பாக இது இருந்து விடக் கூடாது என்ற தவிப்பு ஒரு புறம். சம்பிரதாயத்திற்காக சட்டெனச் சில வரிகள் எழுதிவிட்டுப் போகக் கூடாது என்ற சுயபொறுப்பு இன்னொரு புறம். இன்று எழுத வாய்த்திருக்கிறது.

இந்த மாதத் தொடக்கத்தில் கவிஞர்கள் மசூறாவும் சூ.ஃ.பாவும் என்னைச் சந்திக்க வந்திருந்தார்கள். மாலையாகி விட்டதால் சந்திப்பு மற்றும் அறிமுகத்தோடு மட்டும் சொற்ப பொழுது இருந்து விட்டு அவசர அவசரமாகப் போய் விட்டார்கள். உரையாடலுக்கு நேரம் போதவில்லை. சூ.ஃ.பா தன்னை சுய அறிமுகம் செய்து விட்டு மசூறாவையும் அறிமுகம் செய்து வைத்தார்.

முப்பது ஆண்டுகளுக்குப் பின்னர் மசூறாவைச் சந்தித்தது மிக்க மகிழ்ச்சியாக இருந்தது. நான் பாடசாலைக் காலத்திலேயே தேசியப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் எழுதத் தொடங்கி விட்டேன். அப்போது மசூறாவும் எழுதத் தொடங்கி விட்டார். நான் கல்முனை ஆதம் சோலைக்கிளி எச் எம் ஃபாரூக் அலிக்கான் ஆர் எம் நௌஸாத் ஏ சி எம் பதூர்தீன் ஃபெரோஸா சுல்ஃபிகா சித்தீக் காரியப்பர் கல்முனை முபாரக் சற்றுப் பிந்தி கலைமகள் ஹிதாயா போன்றோர் எழுதி வந்தோம். எங்கள் எல்லோருக்கும் இடையில் ஒரு குடும்ப அங்கத்தவர்களுக்குரிய உண்மை உறவு இருந்தது. அவ்வப்போது அவரவர் வீடுகளுக்குச் சென்று வருவோம். அந்த வகையில் மசூறாவின் வீட்டுக்கு கடைசியாக எண்பது தொடக்கத்தில் சென்றிருந்தேன். எண்பத்து இரண்டில் பல்கலைக்கழக நுழைவு பெற்று ஊரை விட்டுச் சென்ற பின்னர் நண்பர்களின் தொடர்புகள் அறுந்து விட்டன. அந்த வகையில் மூன்று தசாப்தங்களின் பின்னர் சந்திக்க கிடைத்ததில் இரட்டிப்பு மகிழ்ச்சி.

நான் படிப்பு நிமித்தம் ஊரை விட்டுச் செல்லும் போது சூ.ஃ.பாவுக்கு நான்கு அல்லது ஐந்து வயதிருக்கும். சிறு வயதில் நானும் தோளில் அவரைத் தூக்கி வைத்திருக்கிறேன். அத்துடன் எனது நெருக்கமான உறவினரும் கூட. இந்த சந்திப்பின் போது சூ.ஃ.பா சார்ந்து இரு வகைப் பிரமிப்பு. ஒன்று அவரின் மிடுக்கான உயர்ந்து வளர்ந்த உருவம். இரண்டாவதாக பட்டியலிடக் கூடிய ஒரு கவிஞராக முகிழ்த்திருப்பது. உறவினன் என்ற வகையிலும் சக கவிஞர் என்ற வகையிலும் எனக்கும் பெருமைதான். சூ.ஃ.பாவுக்கும் தொடரறாது எழுதிக் கொண்டிருக்கும் மசூறாவுக்கும் என்னுடைய மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

மசூறாவினால் தொகுக்கப்பட்ட அறுபத்து மூன்று முஸ்லிம் பெண் படைப்பாளிகளின் கவிதைத் தொகுப்பான “சுட்டுவிரல்” நூலை மசூறா எனக்குத் தந்து விட்டுச் சென்றார். ஓரிரு வரிகளில் சொல்வதானால் பாரிய உழைப்புடனான ஒரு அரிய முயற்சி. மசூறாவுக்கு வாழ்த்துக்கள். இப்பணி தொடர வேண்டும். நூல் பற்றி நிறைய எழுதலாம். எனது வகுப்புத் தோழனும் உற்ற நண்பனும் உறவனுமான ஃபிர்தவுஸ் சத்தாரின் முன்னுரை ஒன்றே போதும். நான் எழுதுவதாக இருந்தாலும் அவர் எழுதியதைத்தான் எழுதுவேன். அருமையான பொருத்தமான முன்னுரை. எனது நண்பனுக்கும வாழ்த்துக்கள்.

நூலின் நாற்பத்தி ஆறாவது பக்கத்தில் உள்ள கவிதையின் மிகுதி நாற்பத்தி ஏழாவது பக்கத்தில் வந்திருக்க வேண்டும். அப்பக்கம் வெறுமையாக இருக்கிறது. எனக்குத் தரப்பட்ட பிரதியில் மட்டும் இக்குறைபாடா அல்லது எல்லாப் பிரதிகளிலுமா என்பதைக் கவனியுங்கள். ஒரு புன்முறுவல் என்பது அக்கவிதையின் தலைப்பு. உங்கள் அனைவரினதும் பணிகள் தொடர வாழ்த்துக்கள்.

# கரவைதாசனின் பக்கம்



வாரம் வெள்ளிக்கிழமை இங்கொரு வேலைத்தளத்தில் நடந்த நிகழ்வு:

எங்களது தமிழ் வாழ்வில் சாதியம் பார்க்கும் பண்பற்ற முறையால் மொழியில் சாதியக்கூறுகள் எவ்வளவுக்கு எவ்வளவு விரவிக்கிடக்கின்றனவோ அதுபோன்றே மேலைத்தேய மொழியிலும் நிற வர்க்க பாலியல்க் கூறுகள் விரவிக்கிடக்கின்றன.

மதிய உணவு நேரம் எல்லோரும் ஒன்றாக அமர்ந்து உணவு உட்கொண்டிருந்தவேளை ஒரு வெள்ளையினத் தொழிலாளி தான் ஒரு வேலையினை பிழையாகச் செய்துவிட்டேன் எனக் கூறி தன்னைநொந்திருக்கின்றான். அதற்கு இன்னொருவன் வேடிக்கையாகச் சொன்னான் "அறிவில் நீ பாதி நீக்கிரோ தான் என்பது எங்களுக்கு தெரியுமே."
எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். (அதுஅவர்களுக்கு நகைச்சுவை) சொன்னவனும் சிரித்து முடிந்து தலையை நிமிர்த்திய பொழுது அங்கு வேலைசெய்த ஒரு தமிழரின் முகத்தினை சந்தித்திருக்கின்றான். உடனே தன் சக தமிழ்த் தொழிலாளித் தோழனிடம் "என்னை மன்னித்துக்கொள் உன்னைக் கவனிக்காது நான் இப்படி உளறிவிட்டேன்" என மன்னிப்புக் கோரியிருக்கின்றான். பரவாயில்லை விட்டுவிடுங்கள் உனது பண்பை நான் புரிந்துகொள்கிறேன் என்ற தமிழர் தனக்குள் சொல்லிக்கொண்டார். "எங்களது ஊடகங்களும் அறிவாளிகள் என தம்மைத்தாமே பீத்துபவர்கள் உன்னைவிட தாழ்ந்தே இருக்கின்றார்கள்..........."

**இந்த வாரம் ஈழத்தின் முதுபெரும் எழுத்தாளுமை**

## நீர்வைப் பொன்னையன் நினைவு...

*(மார்ச் 24, 1930 - மார்ச் 26, 2020)*



1969 களில் யூனியன் ப்ளேஸில் சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் புத்தக சாலையான மக்கள் பிரசுராலைக்கு சீனாவில் இருந்து தபால் பார்சல் போஸ்ட்டில் வரும்போது அதைப் பெற்றுக் கொண்டு தோழர்களிடம் சேர்க்கும் பெரும் பொறுப்பு இவரிடம் தான் விடப்பட்டிருந்தது. சஞ்சிகைகள் அடங்கும் பொதிகளைக் கிளியர் பண்ணுவதற்கு foreign parcels officeக்கு காலம்தவறாது சென்று வருவாராம். எப்போ சந்திக்க நினைப்பினும். தர்மாராம மாவத்தையில் அமைந்துள்ள அலுவலகத்தில் சந்திக்கலாம். தனிப்பட அவருக்கு பற்பல பதவிகள் நாடி வந்த காலத்தில் அவற்றை எல்லாம் நிராகரித்து மக்கள் சேவைக்காக கம்யூனிஸ்ட் கட்சியின் முழுநேர ஊழியராக பணியாற்றி வந்தார். கிடைக்க இருந்த பல பட்டங்களை நிராகரித்த மக்கள் சேவையாளன். அவரது இழப்பு ஒரு பெரிய இழப்பு.
முற்போக்கு எழுத்தாளர், தொழிற் சங்கவாதி, சிறந்த மொழி பெயர்ப்பாளர் என்று பல்முகங்களுடன் வாழ்ந்து மறைந்த எமது தோழர் நீர்வைக்கு புரட்சிகர வணக்கங்கள்.

தகவல்: தெ.இராசேந்திரம் (நெல்லியடி)

# உயிரோடு உறவாடு



வாசகர் உடல் - உளம் சம்பந்தமான கேள்விகளும் மருத்துவரின் பதில்களும்

Dr. விமலநாதன் MD PhD (Senior Consultant Cardiologist, Oslo, Norway)

**அயடின் மாத்திரைகள் (jodtabletter) பற்றி தற்போது ஊடகங்களில் பேசப்படுகிறது. அதற்கான காரணம் என்ன?**

*அயடின் இயற்கையில் காணப்படும் ஒரு இரசாயன மூலகமாகும். இதனுடைய இரசாயன குறியீடு I. இக்கனிப்பொருளானது கடலில் வளரும் தாவரங்கள் மீன் இறைச்சி வகைகளில் நிறைந்துள்ளது. அயடின் உடற்தொழிற்பாட்டிற்கும் இன்றியமையாததாகும். இது தைரோயிட்டு சுரப்பியினால் சுரக்கப்படும் தைரோயிட்டு ஓமோனின் உற்பத்திக்கு அவசியமாகும். தைரோயிட்டு ஓமோன் உடற்தொழிற்பாடு உடல் வெப்பநிலையை சீர்செய்தல் மூளை வளர்ச்சி எலும்புகளின் உறுதிப்பாடு போன்ற பல முக்கிய செயற்பாடுகளுக்கு அவசியமாகும். கர்ப்பனிப்பெண்கள் பாலூட்டும் தாய்மார்கள் குழந்தைகள் மற்றும் இளவயதினருக்கு அயடின் அவசியமாகின்றது.*

**தற்போது நடைபெறும் யுத்தத்துக்கும் அயோடின் மாத்திரைகளுக்கும் தொடர்பு என்ன? நாம் எல்லோரும் அவசியம் அயோடின் மாத்திரைகள் எடுக்க வேண்டுமா? வயதுஎல்லைகள் உண்டா? தெளிவான விளக்கம் தர முடியுமா?**




*எமது உடற்தொழிற்பாட்டிற்கு தேவையான அயடின் நாம் உண்ணும் உணவிலிருந்தும் அருந்தும் நீரிலிருந்துமே பொதுவாகப் பெறப்படுகின்றது. ஆயினும் சரியான ஊட்டச்சத்துக்கள் உட்கொள்ளாதவிடத்து உடற் தேவையைப் பூர்த்திசெய்ய அயடின் மாத்திரையாக வளங்கப்படுகின்றது.*

*தற்போது அயடின் ஏன் பேசுபொருளாக மாறியுள்ளதெனப் பார்ப்போம். அணுசக்தி உற்பத்தி உலைகள் சிதைவடையும் போது அல்லது யுத்தத்தில் அணுகுண்டு பாவிக்கப்படும்போது அதிலிருந்து கசியும் கதிர்வீச்சமுடைய அயடின் (I 131) காற்றிலும் நீரிலும் கலப்பது ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு கலக்கும் கதிர்வீச்சமுடைய அயடின் நேரடியாகவோ அல்லது வேறு உணவுகள் நீர் வழியாகவோ எமது உடலை அடைந்து தைரோயிட்டு சுரப்பியில் புற்றுநோயை ஏற்படுத்தும் வாய்ப்பு அதிகரிப்பது ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இவ்வாறான தாக்கத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் ஒரு உத்தியாகவும் அதேவேளை சிகிச்சையாகவுமே அயடின் மாத்திரைகளை உட்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.*

*அதாவது, கதிர்வீச்சமுடைய அயடினின் பாதிப்புக்கு உடல் உள்ளாகின்ற போது உடனடியாகவே அயடின் மாத்திரைகளை எடுத்துக்கொண்டால் கதிர்வீச்சமுடைய அயடின் தைரோயிட்டு சுரப்பியைத் தாக்குவதிலிருந்து கிட்டத்தட்ட 95 - 98 வீதம் குறைத்துக் கொள்ளலாம். கதிர்வீச்சமுடைய அயடினின் பாதிப்புக்கு உடல் உள்ளான நேரத்திலிருந்து அயடின் மாத்திரையை உட்கொள்ளும் நேரம் தாமதமாகும் போது பாதிப்பிலிருந்து பாதுகாக்கும் வாய்ப்பும் குறைந்து செல்லும். உதாரணமாக 12 மணித்தியாலங்கள் தாமதித்து மாத்திரையை உட்கொண்டால் 35வீத பாதுகாப்பும், 24 மணித்தியாலங்கள் தாமதித்து மாத்திரையை உட்கொண்டால் 7வீத பாதுகாப்பு மட்டுமே கிடைப்பதும் அறியப்பட்டுள்ளது. எனவே 40 வயதிற்கு உட்பட்டவர்கள் கதிர்வீச்சமுடைய அயடினின் பாதிப்புக்கு உள்ளானால் அயடின் மாத்திரையை எடுத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

*1986ஆம் ஆண்டு* **Tsernobyl** *அணுசக்தி உலைநிலையத்தில் விபத்து ஏற்பட்ட போது நோர்வே போன்ற நாடுகள் அயடின் கதிர்வீச்சத்திற்கு உள்ளானதும் தைரோயிட்டு புற்றுநோயின் தாக்கம் குழந்தைகளிடமும் பதின்ம வயதினரிடையேயும் அதிகரித்திருந்ததும் அவதானிக்கப்பட்டிருக்கின்றது. இந்த அனுபவத்தை அடிப்படையாக வைத்துத்தான் இவ்வாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. வயதானவர்களுக்கும் முதியவர்களுக்கும் இதனால் எவ்வளவு பலன் கிடைக்கும் என்பது கேள்விக்குறியே.*

*இரசிய அதிபர் பூட்டின் யுத்தத்தில் அணுவாயுதங்களையும் பயன்படுத்த தயார்நிலையில் வைத்திருப்பதாக அறிவித்த பின்னரே அயடின் மாத்திரைகள் முக்கிய பேசுபொருளாக மாறியுள்ளது.*

# கடைசி விவசாயி

-சிவா முருகுப்பிள்ளை-




விதை விருட்சம் ஆகும் என்பார்கள். அப்படி ஒரு விருட்சம் இயற்கை அனர்த்தத்தினால் எரியுண்டதை தெய்வக் குற்றமாக நம்புகின்றனர். கிராமிய வழிபாட்டு முறையின் அடிப்படையில் குல தெய்வத்திற்கு பூசை செய்ய முடிவெடுக்கின்றனர்.
வறண்டு போயிருக்கும் கிராமத்தில் ஒரு படி நெல்லாவது செய்து தருமாறு ஊர் மக்கள் அந்த மூத்த விவசாயியை வேண்டி நிற்கின்றனர் என்று ஒரு வாழ்வியலாக தொடங்குகின்றது இத்திரைப்படம்.

ஒரு திரைப் படம் என்ன செய்யும்...? உங்களை அழவைக்கும்... உங்களை கேள்வி கேட்க உந்தும்... இயற்கையை ரசிக்கத் தூண்டும்..... மனிதர்களை நேசிக்க செய்யும்... அப்படிப்பட்ட சினிமாதான் இந்த சினிமா.
ஒரு திரைப் படம் ஒருவரை அழ வைக்க முடியும் என்றால்! நாம் விட்டுவிட்டு வந்த இயற்கை வாழ்வியல் முறை.... அருமை.... இந்த வாழ்க்கை நாம் வாழ வேண்டும்... என்று ஏங்க வைக்குகின்றது.

இந்தத் திரைப்படம் உண்மையான விவசாயியின் கதை. ஒரு கிராமத்திற்கு கமராவை எடுத்துக்கொண்டு, அந்த கிராம மக்களுக்கே தெரியாமல் படம் பிடித்திருப்பதாக உணரவைக்கும் திரைப்படம்.
பொதுப் போக்கிற்கான படம் அல்ல. விஜய் சேதுபதிக்கான படமும் அல்ல. யோகி பாபுவுக்கான திரைப்படமும் இல்லை.
மாறாக “காக்கா முட்டை” திரைப்பட இயக்குநர் மணிகண்டன், கிராமத்து மூத்தவர் நல்லாண்டி, விவசாயதிற்கான நல்ல சினிமா.

இந்தப் படத்தில் விஜய் சேதுபதி, யோகி பாபுவைத் தவிர வேறு யாரும் அறியப்பட்ட நடிகர்கள் அல்ல. அதுவும் விஜய் சேதுபதி ஒரு சகல வல்லமையும் உடைய ஹீரோவாக காட்டாமல் ஒரு மனநிலை பாதிக்கப்பட்ட..... மனப்பிறழ்வுள்ள இளைஞராக கவிஞர் வாலியின் முதல் பக்தி பாடல் ரி.எம். சௌந்தரராஜனின் குரலில்
“கற்பனை என்றாலும் கற்சிலை என்றாலும் கந்தனே உனை மறவேன்......” என்ற முருகன் பாடலுடன் அறிமுகமாகி கௌரவ வேடத்தில் வந்து படத்தின் இடையிலேயே கரைந்து போகும் பாத்திரத்தை அவரைத் தவிர வேறு எந்தத் தமிழ் நடிகனும் ஏற்றுச் செய்திருக்க முடியாது. அந்த வகையில் அவருக்கு ஒரு சிறப்பு மரியாதை பாராட்டு.

வீதி ஓரத்தில் இராமையா(விஜய் சேதுபதி)விற்கு விபூதி கொடுக்கும் எச்சில் இலை பொறுக்கிச் சாப்பிடும் ஒரு “சாமி” மேலதிகமாக ஒரு தடவை விபூதி இராமையாவிற்கு கொடுக்க,
“...சாமி கொடுத்துவிட்டீர்களே இது யாருக்கு...?” என்றதற்கு

“மறந்துவிட்டாயா அங்கே திரும்பிப் பார்... அவளுக்கு கொடு...” என்கிறாரே
இராமையாவின் மனப்பிறழ்விற்கு காரணம் காதல் தோல்வி என்று கணக் காட்சியில் தெரிவித்திருப்பது அபாரம்.
அறிவு (எஞ்சாயி... பாடல் புகழ்) எழுதிய பாடல்களுக்கு சந்தோஷ் நாராணயன் இசை அமைத்திருப்பது மிகச்சிறப்பு. சமூகம் சார்ந்த விழிப்புணர்வுப் பாடல்களை எழுதும் அறிவுவை மறைக்க முற்படும் சில தமிழ் திரையுலகினர் மத்தியில் அவரை முன்னுக்கு கொண்டு வருதாக அமைந்திருப்பதும் சிறப்பானது.

கிராமத்து மூத்தவர்... விவசாயி நல்லாண்டியை கூப்பிட்டு மாயாண்டி ஆக நடிக்க வைத்துள்ளார்கள். நடிக்க வைத்திருக்கின்றார்கள் என்பதை விட பெரியவர் திரைப்படத்தில் வாழ்ந்திருக்கின்றார் என்றே கூற வேண்டும்.
நீதிபதிக்கும் சமூகத்திற்கும் எந்த சம்மந்தமும் கிடையாத நீதிபதிகள் மத்தியில், நாம் சினிமாவில் இதுவரை பார்க்காத ஒரு நீதிபதி. சமூகத்தை புரிந்து கொண்ட இயல்பான இளம் வயது பெண்ணை நடிக்க வைத்திருக்கின்றார்கள். அது சிறப்பான விடயம்.
படத்தில் நடிக்காமல் வாழ்ந்து இருப்பவர் நீதிபதியாக வரும் ரேச்சல் ரெபேக்கா(ஆயுர்வேத மருத்துவர் Raichal Rabecca ) இப்படித்தான் ஒரு நீதிபதி அதுவும் பெண் நீதிபதி இருக்க வேண்டும் என்று ஒரு சமூக அங்கீகாரம் பெற்ற நடிப்பை வெளிப்படுத்தியிருப்பார்.
இப்போ வரைக்கும் அவரை நான் நீதிபதி இடத்தில் இருந்து ஒரு நடிகையாக பார்க்க முடியவில்லை. அவர் வரும் காட்சியை மீண்டும் மீண்டும் பார்க்கத் தூண்டும் நடிப்பு.... காட்சி அமைப்பு....

பொறி பறக்கும் வசனங்களைத் தாண்டி எமது மனதிற்குள் பொறியை ஏற்படுத்தும் வசனங்கள் என்று காட்சிகள் நகருவது சிறப்பு.
தக்காளிவிதை வாங்கக் கடைக்குச் செல்லும் நல்லாண்டியிடம் விதைப் “பைக்கற்றின் 600ரூபாய் நல்லா காய்க்கும் என்றதற்கு...”
“அப்போ அதிலிருந்து விதை எடுத்து அடுத்தமுறை கன்றுகள் எடுக்கலாம்..” என்றதற்கு
“விதை இல்லாமல்தான் பழங்கள் வரும்..” என்றதற்கு பெரியவர் தனது கோவத்தை மிக எளிமையாக
“ஆம்பிளை பிள்ளை பிறந்து விதைக் கொட்டை இல்லாமல் இருந்தால் அப்போது புரியும் அவனுக்கு...” என்பாரே
இதனை விட மரபணு மாற்றப்பட்டு நலமடிக்கப்பட்ட விதைகள் பற்றி மிகச்சிறப்பாக பொறிதட்டும் வசனங்கள் உருவாக்க முடியாது.

“உலகமே உன்னை வெறுத்தாலும் விவசாயம் உன்னை வெறுக்காது உன்னைக் கைவிடாது...” என்று சிறையில் இருக்கும்போது சக கைதி இளைஞர் ஒருவரிடம் கூறும் வார்த்தைகள்...
என் மனக் கண்முன்னே என் தந்தையை இழுத்து வந்ததில் இந்த சினிமா என்னை ஆட்கொண்டுவிட்டது. இது எனக்கானது மட்டும் அல்ல பலருக்குமான உணர்வாக உருவாகும் காட்சி உண்மை யதார்த்தம்.



“கடவுளின் வாகனத்தை யாரும் கொல்லுவாங்களா...?” என்று மயிலைக் கொன்றதாக நீதி மன்றம் கேள்வி கேட்கும் போது பதிலளிப்பதுவுமாக மாயாண்டியின் கிராமம் அங்கு நிற்கின்றது திரைப்படம் எங்கும்.
கூடவே நீதிபதியிடம் “வயலுக்கு நீர் பாய்ச்ச வேணும் என்னை விடிவியுங்கள்.” என்று மாயாண்டி கேட்க
“நெல்லில் என்ன வருமானம் வரும்..?” என்று நீதிபதி கேட்டு
“அதற்கான காசை நீதிமன்றம் தருகின்றது... நீங்கள் சிறையில் இருங்கள் சில நாட்கள்..” என்றதற்கு
“சாகும் அந்த 1000 (நெல்)உயிர்களுக்கு யார் உயிர் தருவது” என்று கூறுவாரே.
மண்ணுக்கும் உயிர் இருக்கு என்று உருக வைத்த காட்சி இது.
“இவரா மயிலை கொன்றிருப்பார்...” என்று நீதிபதி அவரைக் கைது செய்து நீதி மன்றம் கொண்டுவந்த பொலிஸ்காரர்களை பார்த்து கேட்பது என்றவாறாகப் போகும் காட்சிகள் வசனங்கள்.

பொதுவாக பொலிஸ்காரரைப் பற்றி எதிர் மறையான எண்ணங்களை காட்டும் திரைப்படங்களுக்கு மத்தியில்... பொலிஸ் காவலில் உள்ள மாயாண்டியின் கிராமத்தின் வயலுக்கு கடமை நேரத்தில் தினமும் நீர் பாய்ச்சும் படி நீதிமன்றக் கட்டளை பிறப்பிக்கப்பட.....
அதன்படி கிராமத்து வயலில் வயலுக்கு நீர்பாய்சலில் ஈடுபடும் பொலிஸ்காரர் அந்த வாழ்க்கையின் மகிழ்சிகளை உணர்ந்து கிராமத்து இளைஞர்கள் “சார் விடுங்கள் நாங்கள் பார்த்துக் கொள்கின்றோம் நீர் பாய்ச்சலை...” என்ற போது
இந்த “இரண்டு மணி நேரமும்தான் நான் மகிழ்ச்சியாக இருக்கின்றேன்..” என்று சொல்லும்போது விவசாயம் என்பது எவ்வளவு மகிழ்வானது, நிறைவானது என்பதை எடுத்தியம்பி நிற்கின்றது திரைப்படம்.

படத்தின் நிறைவுக் காட்சியில் பெரியவர் இறந்து விடுவார் என்று நாம் பதைபதைப்பில் இருப்போம். இருந்த ஒரு விவசாயியும் இறந்து விட்டார் என்று கதையை முடிப்பார்கள் என்றிருந்தால் அவர் எழுந்து....
கிராமத்தின் குல தெய்வ வழிபாடு அதற்கான மடைப்பண்டம் எடுத்தல் கொண்டாட்டம் ஊர் பெரியவர்களுக்கான மரியாதை செலுத்தல் என்றவாறாக ஊர் மக்கள் ஒன்றாக இணைந்து கொண்டாடும் நம்பிக்கையுடன் திரைப்படத்தை முடித்திருப்பது சிறப்பு.

இப்பவே ஊருக்கு கிழம்பி என் தந்தையர் வாழ்ந்த அந்த தோட்டத்தின் சேத்திற்குள் கால் வைக்க வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்திய திரைப்படம் என்னிடம் இல்லாத நிலத்தை தேடும் ஏக்கமும் எனக்குள் உட்கொண்டு உள்ளத்தில் சம்மாணம் கொட்டி உட்கார்ந்து தம்பட்டம் அடிக்க வைத்திருக்கின்றது.
நல்லாண்டி பெரியவரின் முதல் படமும் கடைசிப்படமும் இதுதான் ஏன் எனில் அவர் இப்போது உயிருடன் எம்மோடு இல்லை என் தந்தை போல். □




Photo: Thamayanthi



# தானம்

## மனோ

வீட்டுக் கதவைத் திறந்து வெளியே வந்தபோது வாசலில் ஒரு மோட்டசைக்கிள் நின்றது.
இளைஞர் ஒருவர் கேற்றைத் திறந்துகொண்டு உள்ளே வந்தார்.
“யாராக இருக்கலாம்!” என நான் புருவத்தை உயர்த்தியபோது அவர் சிரித்தார். இதற்குள் சத்தம் கேட்டு அம்மாவும் வெளியே வந்தார். யாராவது அம்மாவுக்குத் தெரிந்த ஆளாக இருக்கலாம் என நான் அம்மாவைப் பார்க்க, இல்லை என்பது போல அம்மாவும் என்னைப் பார்த்தார்.

“நீங்கள்தான் பிரான்சில இருந்து வந்தவரோ என அவர் சினேகபூர்வமாக என்னைக் கேட்டார். நான் தடுமாறியபடி ஓமென்றேன்.
போட்டிக்கோவில் இருந்த கதிரையை அம்மா இழுத்துவிட்டா.
அவரை இருக்கச் சொல்லிவிட்டு நானும் அமர்ந்தேன்.

“பதினாறு பேருக்குப் பிரச்சனையாப் போச்சு. மிச்சாக்களுக்கும் என்ன நடக்குமோ தெரியேல்ல” என்றார் கதிரைச் சட்டங்களைத் தடவியபடியே.

“யாருக்கு என்ன பிரச்சினை?” என்றேன்.

“முதியோர் இல்லத்தில தான். வயிற்றோட்டம், செமியாக்குணத்தால அதுகள் அவதிப்படுதுகள்” என்றார் அவர்.

“வயசுபோனாக்கள் எண்டால் இப்படித்தான். பிரச்சினையளும் வரத்தான் செய்யும்” என்று இழுத்தேன்.

“வயசுபோன ஆக்கள்தான். ஆனா உங்கட சாப்பாடுதான் பிரச்சனை. ஒராள் இப்பவோ பின்னயோ எண்டு கிடக்கிறார். அநேகமா தப்பமாட்டார்” என்றார்.

“அதுக்கு நான் என்ன செய்யுறது. அது நீங்கள் ஹொட்டல் காரரையல்லோ கேக்கவேணும்?”

“ஹொட்டல்காரர் நீங்கள் கேட்டதைத்தான், தான் சமைச்சுக் குடுத்ததென்கிறார்”

“நான் நல்ல சாப்பாடு கேட்டதென்னவோ உண்மைதான். அதுக்கு அவையல்லோ கவனமாயிருக்கோணும். வயசுபோன நேரத்தில் ஆசைப் பண்டங்கள் தின்ன அதுகளுக்கு

ஆசையிருக்காதா என்ன?”

“ஆசையெல்லாம் சரி, அனுபவிக்கிறது அதுகளல்லே. முதியோர் இல்ல நிர்வாகிகளைக் கேட்டால் அதுகள் தலையில் கைவைக்குதுகள். ஐயோ அண்ணை! வெளிநாட்டுக்காரர் சொன்னாலும் கேக்கினமில்ல. பிள்ளையின் பிறந்த நாள், தங்கன்ர கலியாண நாள் எண்டு சாப்பாடுகள அள்ளிக் குடுக்கினம். நல்லவிசயம்தான். ஆனா, வயசுபோனதுகள் என்ன ஒட்டகங்களே? சில நாள் சாப்பிடிட்டு கனநாள் பட்டினி கிடக்கவேண்டிக்கிடக்கு. இவை ஒரு பார்சலுக்கு ஹொட்டலுக்கு நூற்றம்பது ரூபா குடுக்கினம். நாங்கள் சமைச்சால் நாப்பத்தைஞ்சு ரூபாய்க்குள்ள முடிச்சுப்போடுவம். இனி நாங்கள் சமைக்கேக்க அதுகளுக்கு செமிக்கக்கூடின மாதிரியும் சமைப்பம்”

“ஓ! எங்களுக்கு எல்லாம் விளங்கும். உவை ஏன் காசைக்கேக்கினம் எண்டு.”

“நீங்கள் ஆராவது செய்யிற தவறுக்கு சும்மா அப்பாவியளைத் தண்டிக்கப் படாது. உண்மையா சேவை மனப்பான்மையோட உழைக்கிறதுகளின்ர மனம் என்ன பாடுபடும்?”

“என்ன தம்பி ஏதாவது பெரிய பிரச்சினையே?” விழிகள் பிதுங்கி விழுமளவுக்கு வெருண்டுபோய் அம்மா கேட்டா.

“அம்மா நீங்கள் உள்ளுக்குப் போங்கோ நான் கதைக்கிறன்” என்று அம்மாவை உள்ளுக்கு அனுப்ப முயற்சித்தேன்.

“தம்பி மாமாக்கு இஞ்ச அரசியல் செல்வாக்கிருக்கு. அவருக்கு ஒருக்காச் சொல்லி பிரச்சனையை முடிக்கப்பார். இப்ப நாடிருக்கிற நிலமையில தேவையில்லாத பிரச்சினையள் வரும். பிறகு நீ பிரான்சுக்கும் போகேலாது.” அம்மா சொல்ல எனக்கும் மெதுவாகப் பயம் தொட்டதென்னவோ உண்மைதான். ஆனால் பயத்தை வெளிக் காட்டாமல் மெதுவாக குரலை உயர்த்தி அம்மாவை உள்ளுக்கு அனுப்பிவைத்தேன்.
கெஞ்சப்போனால் எவரும் மிஞ்சத்தான் செய்வர். நான் மிக அவதானமாக முன்பின் தெரியாத அவருடன் உரையாடத் தொடங்கினேன்.

“முதியோர் இல்லமும் முதியவர்களுடைய பிரச்சனையும் வெறுமனே சாப்பாட்டுப் பிரச்சனையல்ல. அவர்களது தனிமைத் துயரும், ஆற்றாமையுமே அவர்களை அதிகம் துன்புறுத்தும்...”

“அதுகிடக்கட்டும் அண்ணை. நீங்கள் இப்ப உங்கட பிரச்சினையப் பாருங்கோ!”

“எனக்கென்ன பிரச்சினை? நான் நல்லாத்தானே இருக்கிறன்!” என்றேன்.

“நீங்கள் நல்லாத்தானிருக்கிறியள். அங்க இப்பவோ பின்னயோ எண்டு இருக்கிறவருக்கு ஏதாவது நடந்தால் தான் இருக்கு பிரச்சினை. கொலைக் குற்றத்துக்க மாட்டுப்படுவியிள்”

“என்ன வெருட்டுறியளா?” ஒரு எள்ளல் சிரிப்பையும் சேர்த்து அவர்மீது எறிந்தேன். அவர் ஒரு கணம் என்மீது பார்வையை நிலைகுத்த விட்டார். பின் தன் தொலை பேசி இலக்கத்தை என்னிடம் நீட்டியபடி, இந்த ஏரியா பொலிஸ் இன்ஸ்பெக்ரர் எனக்கு நல்லா வேண்டின ஆள். ஏதாவது உதவி தேவையென்றால் என்னோட தொடர்பு கொள்ளுங்கோ” என்றார்.

எனக்கு அவரின் நோக்கம் புரிந்தது. ஒரு கணம் தயங்கினேன். எதற்கும் உதவலாம் என்ற யோசனையில் அவரது தொலைபேசி இலக்கத்தை வாங்கிக்கொண்டு அவரை வழியனுப்பி வைத்தேன்.

“என்ன தம்பி ஏதாவது பிரச்சினையே?” என்று கெஞ்சும் குரலோடு பதட்டப்பட்டபடி வெளியே வந்தா அம்மா.

“அதொண்டுமில்லை. நீங்கள் உள்ளுக்குப் போங்கோ” என்று விட்டு எனது பயண முகவரின் தொலைபேசி இலக்கத்தைத் தேடினேன்.

“தம்பி. நான் அவசரமாய் பிரான்ஸ் திரும்பவேண்டி இருக்கு. எவ்வளவு கெதியாய் முடியுமோ அவ்வளவு கெதியா அலுவலைப் பாரும்” என்றேன்.

அம்மா வைத்த கண் வாங்காது மிரண்டுபோய் நின்றார் □

# இலங்கையில் பெண் தலைமைத்துவ குடும்பங்களின் வாழ்வியல்



Photo: Jawahar



*-ப்ரியமதா பயஸ்-*

காலம் காலமாக பெண்கள் தமது குடும்பங்களைத் தலைமை தாங்கித்தான் நடாத்தி வருகின்றனர். இதில் என்ன பெண்தலைமைக் குடும்பங்களுக்கான சிறப்புப் போராட்டம் எனப் பலர் அவாவுகின்றனர். 30 ஆண்டுகால பெரும் போருக்குப் பின் தன்னந்தனியே நிற்கதியாக்கப்பட்டு, மனதளவில் துன்பங்களுடன் குடும்ப குடும்பச் சுமையையும் தாங்கும் பெண்களின் நிலைமை மிக மோசமானதாகவு, மிகவும் பரிதாபமான நிலமைக்கும் தற்போது தள்ளப் பட்டிருக்கின்றது.

இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி, உணவுப் பொருட்களின் விலையேற்றம் என்பன மிக மோசமாப்க பெண் தலைமைக் குடும்பங்களைத்தான் தாக்கி வருகின்றது என்பதை வெளிப்படையாகக் காணமுடிகின்றது.

குழந்தைகளையும் முதியவர்களையும் ஏக்கத்தோடு பராமரிக்கும் பெண்களின் நிலை-மை மிக மோசமாக இருக்கின்றது. கல்வி கற்கும் பிள்ளைகளையுடைய பெண்தலைமைக் குடும்பங்களின் நிலைமை மிக மோசமான கட்டத்தைத் தற்போது அடைந்திருக்கின்றது. நாளுக்கு நாள் உயர்ந்துவரும் விலைவாசியால், பொருட்களின் விலையேற்றத்துக்கு நிகராக கல்வி கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டு இருக்கின்றன. பிரத்தியேக கற்றல் நிலைமைக்கு பிள்ளைகளை அனுப்புதல் என்பது மிக மோசமான நிலமையாக உள்ளது. ஒரு பாடத்துக்கான தனி அல்லது குழு கல்வி கற்றலுக்கு குறைந்தது ஆயிரம் ரூபாவை மாதக் கட்டணமாக ஆசிரியர்கள் அறவிடுகின்றனர். அதைத் தாண்டிய பிள்ளைகளின் கல்விக்கான செலவு என்பது மலையாக உயர்ந்து நிற்க, பிள்ளைகளை கற்பித்து முன்னுக்கு கொண்டு வருதல் என்பது பெண் தலைமைக் குடும்பங்களுக்கு முயற்கொம்பாகவே மாறி இருக்கின்றது.

இலங்கைச் சமூகத்தில் பெண்கள் பற்றிய நல்லெண்ணத்தை நல்ல முறையில் கட்டியெழுப்புவதற்காக அழுத்தம் கொடுக்கும் பொருட்டு ஊடகங்கள் பல்வேறு துறைகளில் தமது பணியை நிறைவேற்றி வருகின்றன. பால் நிலைசார் சமூக அந்தஸ்து, சம அந்தஸ்த்தை உறுதிப்படுத்தல் மற்றும் அரசியற்துறையில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல், பெண்களுக்கெதிராக இடம்பெறுகின்ற பல்வேறு துன்புறுத்தல்கள், வன்முறைகளை ஒழித்தல் மற்றும் சிறுவயது பெண் பிள்ளைகள் கர்ப்பமடைவதைக் கட்டுப்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள், விழிப்புணர்வுக் குறுந்திரைப் படங்களைத் தயார் செய்தல் மற்றும் விழிப்புணர்வுப் பிரச்சாரப் பிரசுரங்களை வெளியிட்டுப் பரவற் படுத்துவது என்று பெண்களுக்கான தீவிரமான ஆதரவு செயற்பாடுகளை ஊடகங்கள், சமூக சேவையாளர்கள் செய்துகொண்டு இருந்தாலும், பெண்களின் உண்மையான சமூக நிலை-மை இனமும் வெளிக் கொணரப்படவில்லை என்றுதான் கூறவேண்டும்.

சமூகத்தில் முன்னுதாரணமாக இருக்கும் ஒருசில பெண்கள் தமது முயற்சி மூலம் தமது பிரச்சனைகளை வெளியே வெளிப்படையாக சொல்லி, அந்த உரிமைகளுக்காகப் போராடினாலும், இன்னும் பல்லாயிரக் கணக்கான பெண்கள் தமக்குள் பலபிரச்சனைகளைப் புதைத்து வைத்துக்கொண்டு, மெல்லவும்முடியாமல் முழுங்கவும் முடியாமல் தவித்துக் கொண்டிருக்கின்றனர். அந்தவகைக்குள் அடங்கும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் நிலைமை மிகவும் வேதனைக்குரியது.

வாழ்க்கைத் துணையை இழந்த பெண்களின் மற்றும் பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்களின் பொருளாதார ரீதியான வலுவூட்டலின் அவசியம் போன்ற கருத்துக்களைக் காத்திரமாக முன் வைக்க வேண்டிய மிகப்பெரும் தேவை தற்போதையை நிலையில் இன்றியமையாததாகி இருக்கின்றது.

நாங்கள் இந்தத் தொடரில் ஏலவே பலவிடயங்களைக் குறிப்பிட்டு இருந்தாலும், பெண்கள் எவ்வளவு கல்வி அறிவுடன் இருந்தாலும் சரியான தொழில் வாய்ப்பு மற்றும் திருப்தியான பொருளாதாரம் என்பன மிக முக்கியமானதாக இருக்கின்றது. இதற்கு பன்மை என்கின்ற அந்த மிகப்பெரிய சக்தி பெண் தலைமைக் குடும்பங்களை மிக மோசமாக ஆட்டிப்படைக்கின்றன.

ஒரு சுய தொழிலுக்கான முதலீடு, அதற்குத் தேவையான உபகரணங்கள்,செலவுகள் என மிகப்பெரும் போராட்டத்தை கல்வியறிவு குறைந்த பெண்களைக் கொண்ட பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் எதிர் நோக்குகின்றன.

இலங்கை சமூகத்தில் விதவைகளான மற்றும் தொழிலற்று இருக்கின்ற பெண்கள், குடும்பத்துக்கு தலைமை தாங்கும் பெண் தலைமைத்துவம் கொண்ட குடும்பங்களை பொருளாதார ரீதியாக வலுவூட்ட அவர்களின் சமூக அந்தஸ்தை கட்டியெழுப்பக் கூடிய வகையில் பல நிகழ்ச்சி நிரல்களைத் திட்டமிட்டு செய்ய வேண்டிய தேவை மிகப்பெரிய அளவில் இங்கே உள்ளது.
இந்த நிலமை தகுந்த முறையில் சீர் செய்யப்பட்டு, அவர்களுக்கான நிரந்தர சுய சம்பாத்தியத்தை ஏற்படுத்தி கொடுக்காது விடின், பெண்கள் தங்களுக்கு தாங்களே வன்முறையாளர்களாக மாறிவிட நேர்கின்றது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இன்று உலகின் ஏதோ ஒரு மூலையில் ஒரு பெண்ணுக்கு அநியாயம் ஏற்படுகின்ற வேளை-யில் அதனை அலட்சியப் போக்கோடும், அதனை அவளுக்குரிய சாபக்கேடாகவும் நோக்கும் நிலை பல பெண்களிடம் காணப்படுகின்றது. இதனைத் தங்களுக்கு ஏற்பட்டதொரு துன்பமாக நினைத்து அதற்கான விடிவுகளைத் தேடுவதில் பெண்களே பின் நிற்கின்றனர் என்பதையும் நாங்கள் கருத்தில் கொள்ளவேண்டும்.
இன்று இலங்கையில் அரசினால் பெண்களின் வாழ்வாதாரத்திற்கான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப் படுகின்றபோதிலும், தமக்கான சுயமான பொருளாதார மேம்பாட்டுச் சிந்தனை இல்லாமல், தம்மைத்தாமே குறைத்து மதிப்பிட்டுக்கொண்டு அடுத்தவரின் கைகளை நாடி நிற்கின்ற நிலைமையையும், அதற்கான பாரிய அளவிலான வழிகாட்டுதல்களை அரசு முன்நின்று செய்யாமையும் பெண்தலைமைக் குடும்பங்கள் சீரழியக் காரணமாகவும் இருக்கின்றது என்பதை அழுத்தம் திருத்தமாகவே இங்கே பதிவு செய்கின்றோம்.

(தொடரும்)

# சிறுவர் பூஞ்சோலை

Påske haren er snill og kommer med snoop til meg i påsken.
Willam. (5år.)




Jeg skal få et stort påske egg. Jeg gleder meg til det.
Tamara (5år)



Det er mange fine farge i regnbuen.
Helen. (4år)

